# ஹிதுபாஷிணீ

ஆசிரியர்: ம. முத்துகிருஷ்ண சாஸ்திரிக

47



விகுருதி ஞு புரட்டாசி மீ | தொகுதி 3 — பகுதி 12. | அக்டோ

சந்தா ரூ. 3.

47

Telephone 57. Telegram "GOKUL" Estd. 1909. P. B No. 24.

கும்பகோணம்

# T. S. R. & CO.,

சந்தனாதித் தைலம்
அரைக்கீரை விதைத் தைலம்
கோகுல் கூந்தல் தைலம்
பத்தி ரகங்கள் & பன்னீர்
அரகஜாக்களையும்
கதம்ப ஊதுவர்த்தியையுமே
உபயோகியுங்கள்.

...ர் கட்டிவைத்ய நிபுணர் வைத்ய வாசஸ்பதி
பண்டிட் P. S. ராம சர்மா அவர்களின்
நீண்டகால பரிசோதனை அனுபவங்களினால் கண்டுபிடிக்கப்பட்ட
கைகண்ட பலனளிக்கும்

"சக்தி ஸஞ்சீவி"
(Regd.)

குழந்தைகளுடைய குலைக்கட்டிகளை எந்நிலைமையிலும் போக்குவதிலும், வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்.

எங்கும் கிடைக்கும்.

தயாரிப்பவர்
ஸ்ரீ சக்தி விலாஸ வைத்யசாலா,
கரூர், S. I. R.

# மூன்றாவது தொகுதியின் விஷய அட்டவணை.

நவம்பர் 1949 — அக்டோபர் 1950.

## தர்மசாஸ்திரம்

1 ஆபஸ்தம்பகிருஹ்யசூத்திரம். 1,4,9, 11, 12.
2 ஸ்மிருதிமுக்தாபலஸாரம் 3,10
3 பிரும்மயஜ்ஞம் 5, 6&7.

## வேதாந்தம்

1 ஸரஸ்வதீரஹஸ்யோபநிஷத் 2 3
2 காச்மீர அத்வைத சைவபிரகரணஸாரஸங்கிரஹம் 3,4.
3 ஈசாவாஸ்யோபநிஷத் 4,5,8.9, 11, 12.
4 அத்வைத சித்தாந்தங்கள் 6&7

## இதிஹாஸம் புராணம்

1 தர்மாகூதம் (ஆரண்யகாண்டம் 1,2,3,4,5 6&7,9, 10, 12.
2 விதுரநீதி 1
3 மார்கழிமாதம் 3
4 ஸ்ரீமத்ராமாயண புனர்வசு பாராயணவிதி 8

## ஸ்தோத்ரம்

1 தேவீரத்னமாலாஸ்தோத்ரம் (முன்தொடர்ச்சி) 1
2 ஸ்வப்னோதிதம் 1
3 தோடகாஷ்டகம் 6&7
4 ஸப்தரிஷி ராமாயணம் 6&7
5 ஸ்ரீஸோமஸுந்தர தாண்டவ ஸ்தோத்ரம் 8
6 ஸ்ரீமந்த்ரமாத்ருகா புஷ்பமாலா ஸ்தவம் 9, 10,11,12
7 ஹநுமத்பஞ்சரத்னம் 4

## வைத்யம்

1 சிரோரோக வைத்யம் 1
2 சரபேந்திரர் நீரழிவு வைத்ய முறைகள் 5
3 சரபேந்திரர் க்ஷயரோக சிகித்சை 6&7
4 கர்ப்பிணிகளுக்கு மருந்து 9
5 நயனரோக சிகித்சை 12
6 ஒற்றைத்தலைவலி மருந்து 3

## கதை

1 "பரச்வோ பவிஷ்யதி" 3
2 தெய்வச்செயல் (தொடர்கதை) 6&7,8,9,10,11.
3 ஸீடோபாக்யானம் 11
4 ஸ்நான பலன் 12
5 இதுதான் அதிருஷ்டம் 4

## ஸங்கீதம்

1 ஸ்ரீராமகீர்த்தனம் 5

## ஜோதிஷம்

1 சனிபகவானின் சஞ்சாரபலன் 5
2 பஞ்சபக்ஷி சாஸ்திரம் 4,6&7

## தமிழ்வளர்ச்சி

1 குவலயங்கண்ட குறள் 8,9, 10, 11, 12.
2 திருவாய்மொழி அநுபவம் 10, 11, 12.

## ஸம்ஸ்கிருதாபிவிருத்தி

1 மாணவர்ஸம்ஸ்கிருதம் 8, 9, 10, 12.

### காவ்ய நாடகங்கள்


1 ஸ்ரீகிருஷ்ணபக்தி சந்திரிகா 1,2,3,5, 6&7, 8, 10.
2 ஸ்ரீதேசிகஸூபாஷிதம் 1,3,4, 6&7
3 கீதகோவிந்த ரஹஸ்யம் 6&7
4 ஸ்ரீ ராமகுண ஸௌந்தர்யவர்ணனம் 6&7
5 நற்குணங்களே நாடு 8
6 ஸீதாவனவாசம் 11


### பொதுவிஷயங்கள்


1 மதகிரந்தங்களுக்கு சரியான மொழிபெயர்ப்புமிக அவசியம் 1
2 விபூதி 1
3 மாணவர்களும் மனசுத்தியும் 4
4 கேள்வியும் பதிலும் 1,2,4,8, 11, 12.
5 தர்மசாஸ்திர பிரயோக கிரந்தங்களின் பயிற்சி 2
6 ஸம்ஸ்கிருதத்தின் பெருமை 2
7 அவசரப்படேல் 3
8 இந்தியக்குடியரசு 4
9 தர்மசாஸ்திரப் பிரசாரம் 4
10 உலகசாந்தி 5
11 ஸ்திரீகளின் மந்திராலோசனை 5,9.
12 ஸம்ஸ்கிருதம் நமதுசொத்து 6&7
13 ஸம்ஸ்கிருதம் முதல் பாஷையாக ஆகலாம் 8
14 ஸம்ஸ்கிருதம் முதல் பாஷையாக ஆகாது. 9
15 மழைக்குவழி என்ன? 
16 வனமஹோத்ஸவம் 10
17 குளம்வெட்டுதல் 10
18 மரம்வளர்த்தல் 10, 11, 12
19 மனிதற்கு மனிதன் அடிமையானன் 11
20 இல்லை என்பது ஆறுவிதமாம் 2
21 பிரும்ம மந்திரத்தை ஏன் உச்சரிப்பதில்லை 5
22 அரிசி வாங்கணுமா? 5
23 விவாஹரத்தால் விதியைவெல்ல முடியுமா. 4
24 ஆசிரியருக்கு வந்த கடிதங்கள் 4,8
25 பத்திசாலியா! சாமர்த்தியமா 4
26 ஹிதபாஷிணிக்கு வாழ்த்து 6&7
27 விரோதியும் விக்ருதியும் 6&7
28 ஈசன் என்னசெய்வான்? 6&7
29 இலக்ஷ்மீதாஜக வந்துவசிக்குமிடம் 9


---

## ஹிதபாஷிணீ சந்தா விபரம்.

| | | | |
|---|---|---|---|
| வருடச்சந்தா | .... | ... | ரூ 3—0—0 |
| போஷகர் சந்தா | .... | .... | ரூ. 50—0—0 |

தக்ஷிணாமூர்த்தி ஸ்தோத்ரம் (தமிழ் உரையுடன்) 0—8—0
லக்ஷ்மீந்ருஸிம்ஹ கராவலம்ப ஸ்தோத்ரம் (தமிழ் உரையுடன்) 0—4—0
அக்ஷர சகுனம் (தமிழ் ஆங்கிலம் மொழிபெயர்ப்புடன்) 0-8-0

சந்தாத்தொகையை முன்னதாகவே அனுப்பிவிட வேண்டும். சந்தாதாரர்களுடைய விலாஸ மாறுதலை உடனேயே நமது காரியாலயத்திற்குத் தெரிவிக்க வேண்டும்.

சந்தாதாரர்கள் கடிதம் எழுதும் பொழுதும், மணியார்டர் செய்யும்பொழுது [illegible] சந்தா எண்ணைக் குறிப்பிடவேண்டும்.

[illegible] "ஹிதபாஷிணீ" 1835/3. மேலவீதி, தஞ்சை.


199851
Rm2153, 610
N43.212


आस्तिकाः ! हितभाषिणीं आद्रियध्वम् ॥

श्रीकान्तनीलकण्ठादिसगुणोपास्तितत्पराः ।
1 यदिसंस्कृतभाषायां युष्माकं प्रीतिरास्तिकाः ॥

2 यदिस्मृतिपुराणादितत्वविज्ञानकौतुकम् ।
3 यदिश्रुत्यन्ततत्वार्थबुभुत्सा न्यायवर्त्मना ॥

4 यदिवा हृद्यसंक्षिप्तनीतियुक्तकथादरः ।
5 यदि वेच्छा सतां प्राचामदुष्टाचारवेदने ॥

6 यदि द्राविडभाषायां स्तोत्रव्याख्यानमिष्यते ।
7 यदि चादृष्टयोः पूर्वं दिदृक्षा गद्यपद्ययोः ॥

8 आवश्यकस्यौषधस्य चिकीर्षा स्वयमेव वा ।
9 कीर्तनानां च जिज्ञासा सस्वरं संस्कृते यदि ॥

10 सरस्वतिमहालग्रन्थनिगूढार्थे यदि स्पृहा ।
11 यदि द्राविडवेदार्थविज्ञाने वा रुचिर्वरा ॥

तदा पठत हृद्यार्थामन्वर्थहितभाषणीम् ।
आद्रियध्वं मुदा युक्ताः सत्सूक्तिसमलंकृताम् ॥

सञ्चिनुध्वं ग्राहकांश्च सूत मित्रेषु चादरात् ।
हिते नः सर्वदा बुद्धिमीशः प्रेरयतात् प्रभुः ॥

## ஆஸ்திகர்களே! "ஹிதபாஷிணியை" ஆதரியுங்கள்.

ஸ்ரீ ரமாகாந்தன், ஸ்ரீ பரமேச்வரன் முதலிய ஸகுணமூர்த்தியையுபாஸிக்கும் ஹே ஆஸ்திகர்களே!

(1) ஸம்ஸ்கிருத பாஷையில் உங்களுக்கு விருப்பமிருந்தாலும்,

(2) ஸ்மிருதிகள் புராணங்கள் முதலியவற்றின் தத்வங்களை அறிய ஆவல் கொண்டாலும்,

(3) சரியான முறைப்படி வேதாந்தங்களின் உட்கருத்துக்களை உணரவேண்டுமெனக் கருதினாலும்,

(4) இனிமையான சிறு நீதிக்கதைகளை ஆதரிக்க விரும்பினாலும்,

(5) நம்முன்னோர்களுடைய குற்றமற்ற ஆசாரங்களை அறிய ஆசைப்பட்டாலும்,

(6) ஸம்ஸ்கிருதத்திலுள்ள சிறந்த ஸ்தோத்திரங்களின் தமிழ் மொழிபெயர்ப்பை விரும்பினாலும்,

(7) இதுவரை பார்க்கப்படாத பல அபூர்வமான கத்யபத்யங்களைக்காண ஆவல்கொண்டாலும்,

(8) மிக அவசியமான சில மருந்துக்களைத் தானாகவே செய்யக்கருதினாலும்,

(9) ஸம்ஸ்கிருதத்திலுள்ள சிலகீர்த்தனங்களை ஸ்வரத்துடன் அறிய எண்ணங்கொண்டாலும்,

(10) தஞ்சை ஸரஸ்வதி மஹாலைச் சேர்ந்த நூல்களில் மறைந்திருக்கும் சிறந்த விஷயங்களை அறிய ஆசைகொண்டாலும்,

(11) "தமிழ் வேதம்" எனப்படும் திருவாய்மொழியின் நுட்பமான தத்துவங்களைத் தெரிந்துகொள்ள விரும்பினாலும்,

"ஹிதபாஷிணீ" என்ற பெயருக்கேற்ற பொருளுடன் கூடிய மனோஹரமான விஷயங்களடங்கிய ஹிதபாஷிணியைப் படியுங்கள்!

ஸாதுக்களுடைய திருவாக்குகளால் அலங்கரிக்கப் பெற்ற ஹிதபாஷிணியை மனமுவந்து ஆதரியுங்கள்.

ஹிதபாஷிணிக்கு பலவாசகர்களைச் சேருங்கள். உங்கள் நண்பர்களிடம் ஆதரவுடன் இந்த ஹிதபாஷிணியைப் பற்றிக் கூறுங்கள்.

எல்லாம் வல்ல இறைவன் நம் அனைவருடைய மனதையும் ஹிதத்திலேயே ஈடுபடும்படி செய்யட்டும்.

---



## श्री राघवस्तुतिः ॥

## ஸ்ரீ ராகவ ஸ்துதி.

कर्ता कञ्जभवात्मना त्रिजगतां भर्ता मुकुन्दात्मना
हर्ता यश्च हरात्मनाघमखिलं स्मर्ता च यस्योज्झति।
धर्तारं धनुषः शरैः सह समादर्तारमार्तान्वयं
सर्तारोप्यपथे श्रिता रघुपतिं वर्तामहे निर्भयाः ॥

கர்தா கஞ்ஜப4வாத்மநா த்ரிஜக3தாம் பர்த்தா முகுந்த3ாத்மநா
ஹர்த்தா ய:ச ஹராத்மநா க4மகி2லம் ஸ்மர்த்தா ச யஸ்யோ [ஜ்ஜ4தி ।

த4ர்த்தாரம் த4நுஷ: ச1ரைஸ்ஸஹ ஸமாத3ர்த்தார மார்த்தாந்வயம்
ஸர்த்தாரோ ப்யபதே2 ச்1ரிதா ரகு4பதிம் வர்த்தாமஹே [நிர்பயா: ॥

ய:- எவர், கஞ்ஜபவாத்மநா:- பிரும்மதேவனாக இருந்துகொண்டு, த்ரிஜகதாம்- மூவுலகங்களையும் கர்த்தா- படைக்கின்றாரோ, முகுந்த3ாத்மநா- விஷ்ணுவாக இருந்துகொண்டு ப4ர்த்தா காப்பாற்றுகின்றாரோ, ஹராத்மநா- பரமேச்வர ஸ்வரூபியாக இருந்துகொண்டு, ஹர்த்தா- அழிக்கின்றாரோ, யஸ்ய- எவரை ஸ்மர்த்தா- ஸ்மரிக்கின்றவன், அகி2லம் அக4ம்- எல்லா பாபங்களையும், உஜ்ஜ4தி தியாகம் செய்துவிடுகின்றானோ, தம்- அப்படிப்பட்ட, ஆர்த்தாந்வயம் ஆத3ர்த்தாரம்- துன்புற்றவர்களை காப்பாற்றுகின்றவரும் (அதற்கென்றே) ச1ரைஸ்ஸஹ அம்புகளுடன், த4நுஷ: த4ர்த்தாரம்- வில்லைக் கையில் ஏந்தியவராயுமிருக்கின்ற, ரகு4பதிம் ஸ்ரீ ராமனை, அபதே2 ஸர்த்தாரோபி- கெட்ட மார்க்கத்தில் செல்லுகின்ற நாங்கள் கூட ச்1ரிதா:- அண்டியவர்களாக இருந்துகொண்டு நிர்ப்பயா: பயமற்றவர்களாக வர்த்தாமஹே- இருக்கின்றோம்.

(கருத்து) பிரும்மதேவனாக இருந்து உலகங்களைப் படைப்பவரும், விஷ்ணுவாக இருந்து அவற்றை இரக்ஷிப்பவரும், பரமேச்வரனாக இருந்து அவற்றை எல்லாம் அழிப்பவரும் ஸ்ரீராமர்தான். அவரை ஸ்மரிப்பவரின் பாபங்கள் விலகும். துன்புற்றவர்களைக் காப்பாற்றுவதற்கென்றே, அவர் வில்லையும், பாணங்களையும், கையில் தரித்துக்கொண்டிருக்கிறார். பிரதிதினம் அறிந்தோ, அறியாமலோ பல பாபங்களைச் செய்துகொண்டு கெட்ட வழியி

லேயே சென்றுகொண்டிருக்கும் நாம் அந்த மஹானை அண்டினால்தான் இஹத்திலும், பரத்திலும், பயமற்றவர்களாக வாழ முடியும். இதனால் பகவானை ஆச்ரயிப்பவன் பாபங்களைச் செய்தாலும் பாதகமில்லை எனக்கருதலாகாது. பகவானை அண்டியவன் விரைவில் பாபச்செயல்களை ஒழித்து நல்வழியில் செல்லத் தொடங்குவான். ஒருகால் அவன் மனம் நல்வழியில் ஈடுபடவில்லை என்றால், அவன் ஈசனை ஆச்ரயிப்பது என்பது வெறும் வேஷமே தவிர, உண்மையில் அவன் பகவானைப் போற்றவில்லை என்றே தீர்மானிக்கவேண்டும்.

(மஹாகவி ஸ்ரீ ராமபத்ர தீக்ஷிதர்.)

---

கும்பகோணம் அத்வைத ஸபை மேற்படி ஸபையின் 56வது வித்வத்ஸதஸ் 18—9—50 முதல் 25—9—50 வரை திருவிசநல்லூரில் ஸ்ரீ காஞ்சீகாமகோடி பீடாதிபதி ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளுடைய ஸந்நிதானத்தில் வழக்கம்போல் வெகுவிமரிசையாக நடந்தேறியது, வாக்யார்த்தங்களும், பரீக்ஷைகளும், பிரசித்த பண்டிதர்களின் உபன்யாஸங்களும் நடைபெற்றன. 21—9—50 அன்று நமது ஆசிரியர் அவர்களால் "அத்யாத்ம ராமாயண ஸாரம்" என்ற விஷயம் பற்றி மேற்படி ஸதஸ்ஸில் உபன்யஸிக்கப்பட்டது.

---

## அக்டோபர் 1950.

### பொருளடக்கம்.


| | |
|---|---|
| மூன்றாவது வருஷ பூர்த்தி. | 447. |
| இது சரியா. | 450. |
| தர்மாக்ருதம். | 452. |
| ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம். | 456. |
| ஈசாவாஸ்யோபநிஷத் | 461. |
| திருவாய்மொழி அநுபவம். | 464. |
| மரம் வளர்த்தல் | 469. |
| சரபேந்திரர் நயனரோக சிகித்ஸை. | 470. |
| ஸ்நான பலன். | 471. |
| ஸ்ரீமந்திரமாத்ருகா புஷ்பமாலா ஸ்தவம். | 477. |
| மாணவர் ஸம்ஸ்க்ருதம். | 480. |


॥ श्रीः ॥

# ॥ हितभाषिणी ॥


| தொகுதி 3 | விக்ருதி வருடம் புரட்டாசியீ | 1950 அக்டோபர் | பகுதி 12 |
|---|---|---|---|


## மூன்றாவது வருஷ பூர்த்தி.

ஸர்வேச்வரனுடைய அருளாலும், ஆஸ்திகர்களுடைய ஆதரவாலும் நமது ஹிதபாஷிணிக்கு இந்த இதழுடன் மூன்றாவது வருஷம் பூர்த்தியடைகின்றது. சென்ற மூன்று ஆண்டுகளாக நமது ஹிதபாஷிணீ, அதன் நோக்கங்களுக்கு முரண்படாத பல அரிய விஷயங்களை எடுத்துரைத்து பலதுறைகளிலும் அபிவிருத்தி அடைந்திருக்கிறது. ஆனாலும் மூன்று வருஷங்களில் வளர்ச்சி அடையவேண்டிய அளவுக்கு அபிவிருத்தி யடைந்ததாகக் கூற முடியாது. ஆஸ்திக்யத்தை வளர்க்கும் ஓர் தமிழ் பத்திரிக்கைக்கு தமிழ்நாட்டில் கிடைத்திருக்கும் ஆதரவு மிகஅதிகம் என ஓரளவு திருப்தியடையலாம். இருந்தாலும் இன்னும் பல அம்சங்களைக் கொண்ட சில அதிக பக்கங்களுடனும், தெய்வபக்தியையும், நல்லொழுக்கத்தையும் புகட்டும் இரண்டொரு படங்களுடனும் வெளியிடவேண்டிய அளவுக்கு ஆதரவு கிடைக்கவில்லை என்பது ஒரு குறைதான். அடுத்த சஞ்சிகை முதல் இன்னும் சில முக்கியமான அம்சங்களுடன் வெளியிட வேண்டுமென்று நமது எண்ணம். ஆஸ்திகர்களுடைய ஆதரவைக் கொண்டே அது பூர்த்தியாகவேண்டும்.

இத்துறையில் வெளியாகும் பத்திரிகைகளுள் நமது பத்திரிகையின் வருடச்சந்தா மிகக்குறைவு என்பதை பல வாசகர்கள் நன்கு அறியக்கூடும். இருந்தாலும் வேறுதுறையில் வெளியாகும் பலபத்திரிகைகளைக்கண்டு அதைப்போல இதில் அதிக பக்கங்களும், படங்களும் ஏன் காணப்படவில்லை என்று சில வாசகர்கள் கேட்கின்றனர். தற்காலம் உள்ள காகிதவிலை அச்சுக்கூலி முதலியவற்றின் உயர்வையும் நமக்குக் கிடைக்கும் விளம்பர வருமானத்தின் நிலைமையையும் ஆலோசித்தால், நாம் தற்காலம் வெளியிட்டுவரும் பக்கங்களே மிக அதிகம் என அவர்களே எளிதில் அறிந்து கொள்ளக் கூடும். பெரும்பாலும் பத்திரிகை

களின் வளர்ச்சி அவற்றிற்குக் கிடைக்கும் விளம்பர வருமானத்தைப் பொறுத்ததாகவே இருக்கின்றது. நாம் குறிப்பிட்ட சில விளம்பரங்களையே பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளுகின்றபடியால் அதிலிருந்து கணிசமான வருமானத்தை எதிர்பார்ப்பதற்கில்லை. வருமானத்தை எதிர்பாராமலே பத்திரிகையை அச்சிட்டு ஆஸ்திகர்களுக்கு விநியோகம் செய்ய நமக்கு வசதியுமில்லை. ஆதலால் நமது ஹிதபாஷிணியின் வளர்ச்சி முற்றிலும் அதன் வாசகர்களின் ஆதரவைப் பொருத்ததாகவே இருக்கிறது இதைநன்கு உணர்ந்து வாசகர்கள் தாமத மன்னியில் அவரவர்களின் வருடச்சந்தா தொகை ரூ. 3/- யும் உடனே அனுப்பிவைத்து எப்பொழுதும் போல் ஆதரிக்க வேணுமாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஆஸ்திகர்களின் ஆதரவே நமது மூலதனம்.

---

## அறிஞர்களின் வரவேற்பு.

ஹிதபாஷிணியின் பொருளாதாரம் காலக்கிரமத்தில் அபிவிருத்தியடைய வேண்டியிருந்தாலும் ஒருவிஷயம் நமக்குவிசேஷ உத்ஸாகத்தையும், ஊக்கத்தையும் அளித்துவருகின்றது. அதாவது பலதரப்பட்ட அறிஞர்களும் இதை முழுமனதுடன் வரவேற்கின்றனர் சாஸ்திரஜ்ஞர்கள் வழக்கறிஞர்கள் பேராசிரியர்கள் புத்தகசாலைகளின் நிர்வாஹிகள் முதலியவர்கள் அடிக்கடி நமது ஹிதபாஷிணியைப் போற்றி கடிதம் எழுதி வருகின்றனர். அவர்களால் இயன்றவரை ஆதரவையும் அளித்து வருகின்றனர். பழைய பிரதிகள் எல்லாவற்றையும் எப்படியாவது சேகரித்துத் தரவேண்டும் என்று பலர் கேட்கின்றனர். நாம் பலவகையில் முயற்சி செய்தும் அவர்களுடைய வேண்டுகோளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையிலிருக்கிறோம். இதிலிருந்து ஹிதபாஷிணிக்கு அறிஞர்களிடம் எவ்வித வரவேற்பு இருக்கின்றது என்பதை உணரலாம்.

இந்த இதழுடன் முடிவடையும் இந்த மூன்றாவது தொகுதியின் விஷய அட்டவணை ஒன்று இத்துடன் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதைத்தனியாக எடுத்து 3வது தொகுதியின் முதல் பகுதிக்கு முன் வைத்து பைண்டு செய்து கொள்ளலாம். அதிலிருந்தும் சென்ற பன்னிரெண்டு மாதங்களாக இது ஆஸ்திகர்களுக்கு எத்தகைய சேவை செய்து வந்திருக்கிறது என்று எளிதில் அனைவரும் அறியக்கூடும்.



## ஹிதபாஷிணியை எப்படி ஆதரிக்கலாம்.

வாசகர்களே! அடியிற்கண்ட பல துறைகளிலும் நீங்கள் ஹிதபாஷிணிக்கு உங்கள் ஆதரவை அளிக்கலாம்.

(1) முதலாவதாக "உங்கள் சந்தா முடிவடைந்து விட்டது" என்று உங்களுக்கு ஞாபகக்குறிப்பு ஒன்று கிடைத்ததும் தாமதமன்னியில்உங்கள் சந்தாதொகையை அனுப்பிவிடுங்கள். உடனே அனுப்ப முடியாதவரை "கூடியசீக்கிரம் அனுப்பப்படும்" என்று வரை நமது காரியாலயத்திற்கு உடனே தெரிவித்து விடுங்கள். அப்படியும் செய்யாவிடில் வி-பி யில் 'ஹிதபாஷிணீ" உங்களைத் தேடிவந்தால் திருப்பி அனுப்பாமல் பெற்றுக்கொள்ளுங்கள்.

(2) உங்கள் நண்பர்களிடம் இதைப்பற்றி கூறி குறைந்தபக்ஷம் இரு சந்தாதாரர்களையாவது சேர்த்துக் கொடுங்கள். "வாசா தர்மமவாப்நுஹி"

(3) ஹிதபாஷிணியைப் பற்றி உங்கள் கிராமத்திலோ நகரத்திலோ தீவிரமாகப் பிரசாரம் செய்ய ஆசிரியரின் உதவி தேவையாக இருந்தால் உடனே கீழ்க்கண்ட ஏற்பாட்டை செய்துவிட்டு நமது காரியாலத்திற்கு எழுதுங்கள்.

சுருதிஸ்மிருதி இதிஹாஸ புராண சம்பந்தமான இரண்டு அல்லது மூன்று உபன்யாஸங்களை ஆசிரியர் உங்கள் ஊருக்கு வந்து செய்வதற்கு வேண்டிய வசதியைச் செய்து கொடுங்கள். மேற்படி உபன்யாஸங்களின் முடிவில் "ஹிதபாஷிணியை ஏன் படிக்கவேண்டும்" அதன் நோக்கங்கள் என்ன? என்பதைப் பற்றி ஆசிரியர் விரிவாக எடுத்துக் கூறுவார். அப்பொழுது பலர் தானகவே சந்தாதாரராகச் சேரக்கூடும். இவ்விதமே பலவிடங்களிலும் பலர் சந்தாதாரராகச் சேர்ந்திருக்கின்றனர். மேற்படி உபன்யாஸங்களுக்கு பிரசாரமே முக்கியநோக்கமானதால் வேறு லௌகிகப்பிரயோஜனம் முக்கியமாக எதிர்பார்க்கப்படமாட்டாது.

இவ்விதபிரசாரத்தை உத்தேசித்து பிரதிமாதம் சிலதினங்கள் வெளியூருக்குச் செல்லுவதாக ஆசிரியர் தீர்மானம் செய்திருக்கிறார். அந்த சந்தர்ப்பத்தை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள முன்வரலாம். தற்காலம் எதற்கும் தீவிரமான பிரசாரமே தேவை என்பது வெளிப்படை.

# இது சரியா?

சென்னையில் பி-ஏ வகுப்பில் படித்துக்கொண்டிருக்கும் யஜ்ஞேசசர்மா என்ற மாணவன் நவராத்திரி விடுமுறையில் குபேரமங்கலம் என்ற கிராமத்திற்கு வந்து சேர்ந்தான் அங்கு அவனுடைய தாத்தா தர்மபுத்திர தீக்ஷிதர் வசித்துவந்தார். அவருக்கு சுமார் 100 காணி நிலங்களும், லக்ஷ ரூபாய் ரொக்கமும் உண்டு. இரண்டு மூன்று நாளாக தொடர்ச்சியாக யாரோ ஒரு பிராம்மணன் தாத்தாவிடம் வந்து ஏதோ, ஒன்றைக்கேட்பதையும், "ஆகட்டும் போய்விட்டு வாருங்கள்" என்று தாத்தா பதில் சொல்லுவதையும் கவனித்துக்கொண்டிருந்த பேரன் தாத்தாவிடம் அடியிற்கண்டவாறு பேசத்தொடங்கினான்.

**பேரன்:**— தாத்தா யார் அந்தப் பிராம்மணன்? இரண்டு மூன்று தினங்களாக அலைந்துகொண்டிருக்கிறாரே! மேலும் பகல் 11 மணி சுமாருக்கு சாப்பாட்டு வேளையில் வருகிறார். "சாப்பாடு ஆகிவிட்டதா" என்றுகூட கேட்காமல் அவரைக் கண்டவுடன் 'ஆகட்டும் போய்விட்டு வாரும்' என்று கொஞ்சம் கூட தயக்கமன்னியில் சொல்லி அனுப்பிவிடுகிறீர்களே! உங்கள் வார்த்தையைக் கேட்டதும், அவர் முகவாட்டத்துடன் தலையில் துணியை போட்டுக்கொண்டு வெய்யிலில் நடந்த தெருவோடு தயங்கித் தயங்கிச் செல்லுவதைப் பார்க்க மிகபரிதாபமாக இருக்கிறதே! இது சரியா?

**தாத்தா:**— ஏலே! சிறுசா! லக்ஷணமா! இல்லாமல் பெரியவாளைப்பார்த்து இப்படி கேட்பது சரியாடா?

**பே:**— தாத்தா! கோபம் வேண்டாம்! உண்மையையும், நன்மையையும் சிறியவர்கள்கூட எடுத்துக்கூறலாம். அதில் பிசகு ஒன்றுமில்லை. அவர் எதற்காக தினம் வருகிறார் என்பதைச் சொல்லக்கூடாதா?

**தா:**— அவருக்கு என்னமோ பணம் வேண்டுமாம்.

**பே:**— எதற்காக?

**தா:**— ஏதோ ஒரு மாதப்பத்திரிகைக்கு அவர் ஏஜண்டாம். அப்பத்திரிகையை சென்ற 2 வருஷ காலமாக நமக்கு அனுப்பி வருகிறார். அதற்கென பணம் கேட்கிறார்.

**பே:**— பத்திரிகை உங்களுக்குத்தேவையா? இல்லையா? பத்திரிகையின் பெயர் என்ன?

**தா:**— பத்திரிகையின் பெயர் "ஹிதபாஷிணீ" பத்திரிகையில் பல அபூர்வ விஷயங்கள் பிரசுரிக்கப்படுகின்றன. ஆதலால் தேவையில்லை எனக்கூறமுடியாது.



**பே:**— அந்தப்பத்திரிகையா! அதற்கு இன்னும் நீங்கள் பணம் கொடுக்கவில்லையா? சென்ற லீவுக்கு நான் வந்திருந்தபோது அதைப்பற்றி பிரமாதமாக புகழ்ந்து பேசினீர்களே! சந்தாவும் மிக சொற்பம். அதைக்கொடுக்க ஏன் இன்னும் ஆட்டம் போடுகிறீர்கள்.

**தா:**— அதெல்லாம் ரஹஸ்யமான விஷயம். கொஞ்சநாள் செழித்து நீ தானாகவே அந்த ரஹஸ்யத்தை உணர்ந்துகொள்வாய்

**பே:**— வேண்டவே வேண்டாம். இம்மாதிரி பிறரை ஏமாற்றும் ரஹஸ்யம் எனக்குத்தெரியவேவேண்டாம்.

**தா:**— அட போடா! அசடே! அது ஒரு தர்ம பிரசாரம் செய்யும் பத்திரிகை. அதற்கு நம்மைப்போன்ற ஆஸ்திகர்களுடைய ஆதரவு கட்டாயம் கிடைக்கும் என்று அந்த ஏஜண்டு நம்புகிறான். அவனுக்கு அந்த நம்பிக்கை உள்ளவரை நாம் எதற்குப் பணம் அனுப்பவேண்டும். மேலும் நம்மைப்போன்றவர்களுக்கு அவர் பத்திரிகையை அனுப்பாத போனால் அவருக்கு வேறு எப்படி பத்திரிகை செலவாகும்? ஆதலால், அவரும் அனுப்பிக்கொண்டே இருப்பார்; நாமும் படித்துக்கொண்டே இருக்கலாம்.

**பே:**— தாத்தா! தாங்கள் கூறுவது முற்றிலும் தவறு. மாற்றிச்சொன்னால் பகல் கொள்ளை என்று கூட கூறலாம். உங்களை நம்பினவர்களை இவ்விதம் மோசம் செய்வது சரியா! என்று ஆலோசித்துப்பாருங்கள். நமது ஸ்மிருதிகளில் ஆத்ம குணங்கள் மிக அவசியம் என்றும் அவை இல்லையேல் எவ்வளவு வைதிக கர்மாக்களை அனுஷ்டித்தும் பயனில்லை என்றும் கூறப்பட்டிருக்கிறது. நீங்கள் பிரமாதமாக வேஷம் போடுகிறீர்கள். பெரிய இடங்களில் எல்லாம் தொடர்பு வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு ஆஸ்திக ஸமுதாயத்தில் நல்ல செல்வாக்கும் இருக்கிறது.

ஆனால் நீங்கள் செய்யும் காரியம் என்னவோ, முற்றிலும் தவறுதலாக இருக்கிறது. ஆதலால் உங்களைப்போன்றவர்களை வேஷதாரிகள் என்றுசிலர் நிந்திக்கின்றனர். உங்களைப்போன்றவர்களால்நமது சமுதாயத்திற்கே ஓர்களங்கம் ஏற்பட்டிருக்கிறது.

**தா:**— ஏ! அதிகப்பிரசங்கி! பேச்சை நிறுத்து.

**பே:**— நீங்களும் இந்த கெட்ட பழக்கத்தை இன்றுடன் விட்டுவிடுங்கள். பணம் கொடுக்க விருப்பமில்லை...

(482-ம் பக்கம் பார்க்கவும்.)

R.m2113,n47)
199851

# தர்மாகூதம்.

(ஆடி இதழ் 379-ம் பக்கத்தொடர்ச்சி)

(5) அக்னி இல்லாததால் தேவர்களுக்கு கர்மாவில் அதிகாரம் இல்லை என்ற ஐந்தாவது பக்ஷமும் சரியல்ல. அவர்களும் அக்னி ஆதானம் செய்துகொண்டு அக்னியை சம்பாதித்துக் கொள்ளலாம். ஆதானப்பிரகரணத்தில் "வஸந்தே ப்3ராஹ்மணோ அக்3னீநாத3தீ4த" முதலிய வாக்கியங்களால் பிராம்மண க்ஷத்ரிய வைச்யர்களுக்கு மட்டும்தான் ஆதானத்தில் அதிகாரம் இருப்பதாகத்தெரியவருகிறதே? தேவர்களுக்கு அக்னி ஆதானத்தில் அதிகாரம் எப்படி சித்திக்கும்? என்றால், தேவர்களுக்குள்ளும் பிராம்மணன், க்ஷத்திரியன் முதலிய வர்ண விபாகமிருப்பதால் அவர்களும் மேற்கூறிய சாஸ்திரப்படி அக்னி ஆதானம் செய்துகொண்டு அக்னியை சம்பாதித்துக்கொள்வதில் தடையில்லை

சந்தோகர்களுடைய **ப்ரபதப்ராம்மணத்தில்** "த்வம் தே3வேஷு ப்ராஹ்மணோஸி" "அஹம் மநுஷ்யேஷு" என்று அக்னியைப்பார்த்து கூறும் ஓர் மந்திரம் காணப்படுகிறது. இதில் ஸ்பஷ்டமாக, தேவர்களுள், அக்னிதேவன் பிராம்மணன் என வர்ணிக்கப்பட்டிருக்கிறது. **தைத்திரீய ச்ருதியிலும்,**

**ब्रह्मवाग्निः**- அக்கி-பிராம்மணன்- **क्षत्रमिन्द्रः**- இந்திரன்- க்ஷத்ரியன், **मरुतो वै देवानां विशः**- தேவர்களுள், மருத்துக்கள் வைச்யர்கள் என்றும் கூறப்பட்டிருக்கிறது. **ப்ருஹதாரண்யகோபநிஷத்திலும்** **ब्रह्म वा इदमग्र आसीदेकमेव । तदेकम् सन्न व्यभवत्** (ப்ரு- அத்-1, பிராம்மணம் 4.) முதலிய வாக்யங்களில் தேவர்களுள் பிராம்மணன், க்ஷத்ரியன் முதலிய பிரிவினை இருப்பதாகவே வர்ணிக்கப்பட்டிருக்கிறது. **மோக்ஷ தர்மத்திலும்,** "தேவர்களுள் ஆதித்யர்கள்-க்ஷத்ரியர்கள், மருத்துக்கள் - வைச்யர்கள், அச்விநி தேவர்கள்-சூத்ரர்கள், அங்கிரஸர்கள்-பிராம்மணர்கள், எனப் பிரித்துக் கூறிவிட்டு முடிவில்

'इत्येतत्सर्वदेवानां चातुर्वर्ण्यं प्रकीर्तितम्'

இவ்வாறு தேவர்களுள். சாதுர்வர்ண்யம் கூறப்பட்டது" என்று காணப்படுகிறது. மேலும் **तं पूषाधत्त तेन पूषार्ध्नोत् तं त्वष्टाधत्त,** முதலிய வாக்கியங்களால் பூஷா, த்வஷ்டா முதலிய தேவர்கள் அக்னி ஆதானம் செய்ததாகவே தெரியவருகிறது.

6 "தேவர்கள் கர்மாக்களை செய்யக்கூடாது" என்று நிஷே



தவசனமும் காணப்படவில்லை. இதற்கு நேர் மாறுதலாக தேவர்கள் வித்யாப்யாஸம் செய்ததாகவும் கர்மாக்களை அனுஷ்டித்ததாகவும் பல வேதவாக்கியங்களிலிருந்தே தெரியவருகிறது. **சாந்தோக்யோபனிஷத்தில்**- 101 வருஷங்கள் தேவேந்திரன் பிரஜாபதியிடம் பிரும்மசர்யமிருந்து வேதாந்த வித்யையைக்கற்றான் என்று கூறப்பட்டிருக்கிறது. **தைத்திரீயோபனிஷத்தில்** வருணனுடைய பிள்ளை பிருகு தகப்பனிடம் பிரும்மவித்யையைக்கற்றான்" என்று உரைக்கப்பட்டிருக்கிறது.

உபனிஷத்துக்களில் உள்ள "இந்திர ப்ரதர்தன ஆக்யாயிகை"யிலிருந்தும் யமநசிகேதஸ் ஸம்வாதத்திலிருந்தும் தேவர்கள் பிறரிடமிருந்து வித்யையைக் கற்றுக்கொண்டதாகவும், பிறருக்கு வித்யையை உபதேசம் செய்ததாகவும் தெரியவருகிறது. **கடோபனிஷத்தில்** '**ततो मया नाचिकेतश्चितोऽग्निः**' 'என்னால் நாசிகேதசயனம் செய்யப்பட்டது' என்று யமன் கூறுவதிலிருந்தும், **देवा वै वरुणमयाजयन् । देवा वै सत्रमासत । देवा यज्ञमतन्वत ।** முதலிய பல வாக்கியங்களிலிருந்து தேவர்கள் கர்மாக்களை அனுஷ்டித்தார்கள் என்றும் தெரியவருகிறது.

ராமாயண உத்தர காண்டத்திலும், பாரதம் **உத்யோக பர்வத்திலும்** தேவேந்திரன் அச்வமேத யாகத்தைச்செய்து விருத்ராஸுரனைக் கொன்றதாலுண்டான பிரும்ஹ ஹத்யாதோஷத்திலிருந்து விடுதலையடைந்ததாகக் கூறப்பட்டிருக்கிறது. **மோக்ஷ தர்மத்தில்** "ஒரு சமயம் நாரதர் கங்கைக்கு ஸ்நானத்திற்காகச்சென்றார். அங்கு தேவேந்திரனும் வந்து சேர்ந்தான். இருவரும் ஸ்நானம் செய்துவிட்டு அங்குள்ள மணல் திட்டில் ஜபங்களைச்செய்து ஸூர்யன் உதயமானவுடன் உபஸ்தானம் செய்தார்கள்" என்று வர்ணிக்கப்பட்டிருப்பதால் தேவர்கள் ஸந்தியாவந்தனத்தையும் அநுஷ்டித்தார்கள் என்றே ஏற்படுகிறது. ஆதலால் தேவர்களுக்கு கர்மாக்களில் அதிகாரம் உண்டு என்று சித்திக்கிறது.

## ஸ்வர்க்கத்தில் கர்மா உண்டா!

தேவர்கள் ஸ்வர்க்கத்தில் வசிப்பதால் அங்கேயே அவர்கள் கர்மாக்களை அநுஷ்டானம் செய்யலாமா? அல்லது நமது பாரத வர்ஷத்திற்கே கர்மபூமி என்று பெயரானதால் இவ்விடத்திலேயேதான் வந்து கர்மாக்களை அநுஷ்டித்தாக வேண்டுமா? **விஷ்ணு புராணம் 2-வது** அம்சத்தில் "தெற்கு சமுத்திரத்திற்கு வடக்கேயும், ஹிமய மலைக்கு தெற்கேயுமுள்ள பாகத்திற்கு

பாரத வர்ஷம் என்று பெயர். இது ஒன்பது ஆயிரம் யோஜனை விஸ்தாரமுள்ளது. இதுதான் கர்மபூமி. ஸ்வர்க்கத்திற்கென்றே, மோக்ஷத்திற்கென்றே இவ்விடத்தில் பலர் பலவித உபாயங்களை அநுஷ்டிக்கின்றனர். மற்ற பூமிகள் எல்லாம் போக பூமிகளே தவிர கர்மபூமி அல்ல. ஆதலால் பல ஆயிர ஜன்மாக்களை எடுத்து பலவித புண்யகர்மாக்களைச் செய்ததன் பயனே இக்கர்ம பூமியில் ஒருவன் மானிடனாகப் பிறக்கின்றான்" என்று கூறப்பட்டிருப்பதால் போகபூமியாகிற ஸ்வர்க்கத்தில் அவர்கள் கர்மாக்களை அநுஷ்டானம் செய்ய முடியாதாகையால், இந்த கர்மபூமியில் வந்துதான் கர்மாக்களை அநுஷ்டித்தாகவேண்டும்.

இவ்விதமே பாரதம் வனபர்வத்தில் தீர்த்தயாத்ராப்பிரகரணத்தில் பல ஸ்தலங்களில் தேவர்கள் யாகங்களை அநுஷ்டித்தார்கள் என்றும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது.

கே:- "गावोवाएतत्सत्रमासत" (பசுக்கள் இந்த ஸத்ரயாகத்தைச்செய்தன) முதலிய வேதவாக்கியங்களை அர்த்தவாதம் என்றும் அதன் அர்த்தத்தை அப்படியே ஏற்றுக்கொள்ளக்கூடாதென்றும் ஏதோ வேறு ஒரு விஷயத்தை துதிப்பதற்காக ஏற்பட்டதென்றும் கூறப்படுகின்றதே, அதுபோல் தேவர்கள் கர்மாக்களை அநுஷ்டித்தார்கள் என்று கூறும் வாக்கியங்களையும் அர்த்தவாதம் என்றும், அவற்றின் அர்த்தங்கள் எல்லாம் அப்படியே ஏற்றுக்கொள்ளக்கூடியவை அல்ல என்றும் ஏன் சொல்லக்கூடாது?

பதில்:— சில அர்த்தவாதங்களுடைய அர்த்தம் முற்றிலும் பொருத்தமற்றவையாகவே இருக்கும். உதாஹரணம்— 'கா3வோ வை ஸத்ரமாஸத" முதலியவை. பசுக்களுக்கு ஸத்ரயாகம் செய்ய சாமர்த்தியமில்லாததால் இந்த வாக்யத்தின் அர்த்தம் பொருத்தமற்றது. ஆகலால் இம்மாதிரி விருத்தார்த்தவாதங்களின அர்த்தம் விவக்ஷிதமல்ல எனக்கூறப்படுகிறது.

சில அர்த்த வாதங்களின் அர்த்தம் மிகப்பொருத்தமுள்ளதாகவும் எவ்வித விரோதமற்றதாகவுமிருக்கும். உதாஹரணம் "வஜ்ரஹஸ்த: புரந்த3ர:" முதலியவை. இம்மாதிரி அர்த்தவாதங்களின் அர்த்தத்தை ஏற்றுக்கொள்ளுவதில் யாதொரு பாதகமுமில்லாததால் இவற்றின் அர்த்தம் விவக்ஷிதந்தான் என்றே வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இவ்விஷயம் உத்தரமீமாம்ஸா தேவதாதிகரணத்தில் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது.

கே:— அப்படியானால் இந்திரனைக் குறித்தே இந்திரனும், அக்னியைக்குறித்தே அக்னியும் எப்படி யாகம் செய்யமுடியும்? ஒருவனே யாகத்தில் கர்மாவாகவும் கர்த்தாவாகவும் இருக்க முடியாதே!



பதில்:— இந்திரன் முன் கல்பத்தில் உள்ள இந்திரனைக் குறித்து யாகம் செய்யலாம். அல்லது இந்திரனை தேவனாகஉடைய யாகத்தைத்தவிர மற்ற யாகங்களை மட்டும் அவன் செய்யலாம்.

(7) தேவர்களைக்குறித்து கர்மாக்கள் விதிக்கப்படாததால் அவர்களுக்கு கர்மாக்களில் அதிகாரமில்லை என்ற கடைசி பக்ஷமும் சரியல்ல. "ஸ்வர்க்ககாமோ யஜேத" முதலிய விதி வாக்கியங்களில், மநுஷ்யன் என்றோ, தேவன் என்றோ குறிப்பாகக் கூறப்படாததால் வித்யை, அக்நி, சாமர்த்தியம் இவையெல்லாம் பெற்ற அனைவரும் மேற்படி கர்மாக்களை அநுஷ்டிக்கலாம் என்றே ஏற்படுகிறது இப்படி இல்லையேல் மனிதர்களுக்கு மட்டும் எப்படி அதிகாரம் சித்திக்கும்?

ஆதலால் தேவர்களுக்கும் தர்மாநுஷ்டானத்தில் அதிகாரம் உண்டு என்று சித்திக்கின்றது. இவ்வாறு "தர்மமாராதயிஷ்ணவ:" என்ற வால்மீகியின் சுலோகத்திற்கு, "அகஸ்தியாசிரமத்தில் வசிக்கும் தேவர்களும் தர்மாநுஷ்டானத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்" என்ற அர்த்தத்தை ஏற்றுக்கொண்டு "தேவர்களுக்கும் கர்மாநுஷ்டானத்தில் அதிகாரமுண்டு" என்று நீண்ட விசாரத்தால் தீர்மானம் செய்யப்பட்டது.

சிலர் இதற்கு வேறுவிதமாகவும் அர்த்தங்கூறுகின்றனர். அதாவது "தர்மம்—தர்மஸ்வரூபியான அகஸ்திய மஹரிஷியை ஆராத4யிஷ்ணவ:— உபாஸிக்கவேண்டுமென்ற விருப்பங்கொண்டு அகஸ்தியாசிரமத்தில் தேவர்கள் வசிக்கிறார்கள். அப்பொழுது அவர்கள் குறிப்பிட்ட ஸ்தானங்களில் வீற்றிருப்பதற்காக அகஸ்தியாசிரமத்தில் ஒவ்வொரு தேவருக்கும் தனித்தனி ஸ்தானம் போடப்பட்டிருப்பதாகவும் வர்ணிக்கப்பட்டிருக்கிறது. பிரும்மா, விஷ்ணு, இந்திரன், ஸூர்யன், யமன், பகன், குபேரன், தாதா, விதாதா, வாயு, வருணன், காயத்ரீ, வஸுக்கள், ஸர்ப்பராஜன், கருடன், சுப்பிரமணியன், இவர்களுக்கெல்லாம் தனித்தனி ஸ்தானம் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(தொடரும்)

# ஆபஸ்தம்ப க்ருஹ்ய ஸூத்ரம்.

(முன் இதழ் தொடர்ச்சி)

**दत्ताम्, गुप्ताम्, द्योताम्, ऋषभाम्, शरभाम्, विनताम्, विकटाम्, मुण्डाम्, मण्डूषिकाम्, साङ्कारिकाम्, राताम्, पालीं, मित्राम्, स्वनुजाम्, वर्षकारीं च वर्जयेत् ॥**

*த3த்தாம். கு3ப்தாம். த்3யோதாம் ரிஷப4ாம் ச1ரபாம் விநதாம் விகடாம் முண்ட4ாம் மண்டூ3ஷிகாம் ஸாங்காரிகாம் ராதாம் பாலீம் மித்ராம் ஸ்வநுஜாம் வர்ஷகாரீம் ச வர்ஜயேத்।* (12)

'தத்தை முதலிய பதினைந்து விதமான கன்யைகளை விவாஹம் செய்துகொள்ளலாகாது என இதில் கூறப்படுகிறது.

**दत्ता-** வேறு ஒருவனுக்குக் கொடுப்பதாக முன்னமேயே தாய் தந்தையர்களால் உறுதியாகக் கூறப்பட்டவள், அல்லது முறைப்படியே தாரை வார்த்து பிறனுக்குக் கொடுக்கப்பட்டவள். **गुप्ता-** பிறர் கண்ணில் இவள் தென்படக்கூடாது எனக் கருதி சட்டை முதலியவற்றால் மறைக்கப்பட்டவள், அல்லது வெளியில் சென்றால் அவள் நடத்தை சரியாக இராது என்ற சங்கையினால் மிக ஜாக்கிரதையாக இரக்ஷிக்கப்படுகின்றவள், **द्योता-** பூனைக்கண்ணுடையவள், அல்லது தவிட்டு நிறமான கேசங்களையுடையவள், அல்லது நேர் பார்வையற்றவள், **ऋषभा-** எல்லாவற்றிலும் தலைவியாக இருப்பவள், அல்லது ரிஷபம்போல் நடக்கின்றவள், அல்லது முதுகில் கொண்டை போல் முண்டு உள்ளவள், **शरभा-** காந்தியற்றவள், சிலர் அதிக காந்தியுள்ளவள், எனக்கூறுகின்றனர். பரபுருஷனை அவளும், அவளை பரபுருஷர்களும் விரும்பக்கூடுமாகையால் அவளும் வர்ஜிக்கத்தகுந்தவளே. **विनता-** முடம், **विकटा-** நீண்ட முழங்காலையுடையவள், அல்லது கோணலான முழங்காலையுடையவள், **मुण्डा-** தலையில் கேசமற்றவள், **मण्डूषिका-** உடல் வளர்ச்சியற்றவள், சிவந்த பற்களையுடையவள், தவளைபோல் சொற சொறப்பான தோலையுடையவள், எரிக்கப்பட்ட அவயவத்தை உடையவள். **साङ्कारिका-** எவள், கர்ப்பத்தில் இருக்கும்பொழுது அவளுடைய தாய் கணவனுக்கு அஸ்தி சஞ்சயனம் செய்தாளோ அவள் அல்லது வேறு குலத்திற்கு பெண்ணாக கருதப்பட்டவள். **राता-** பந்தாட்டம் முதலியவற்றில் மிகவும் பிரியமுள்ளவள், அல்லது ருதுஸ்நானம் செய்தவள். (சிலர் விஷயங்களை அனுபவிப்பதில் மிகவும் ஈடுபட்டவள் எனக்கூறுகின்றனர்.) **पाली-** குழந்தைகளையோ, வீடு,



வயல் முதலியவற்றையோ, பாதுகாத்துக் கொண்டிருப்பவள், **मित्रा-** பல தோழிகளையுடையவள், அல்லது தனக்கு ஸகாவாக இருப்பவள், **स्वनुजा-** அழகுவாய்ந்த தங்கையையுடையவள், அல்லது வான் பிறந்த வருடத்திலேயே பின்பு பிறந்தவள், **वर्षकारी-** வயதைவிட ஒருவாருஷம் முன்பு பிறந்தவள், இவர்கள் எல்லோரையும் விவாஹத்தில் அவச்யம் வர்ஜிக்கவேண்டும்.

முன் ஸூத்திரத்திலுள்ள "பரிவர்ஜயேத்" என்ற சொல்லே இந்த ஸூத்திரத்திலும் தொடருமானாலும் மறுபடியும் இங்கு "வர்ஜயேத்" என்று போடப்பட்டிருப்பதற்கு இருவிதமாக அபிப்ராயங்கள் கூறப்பட்டிருக்கின்றன. வரணம் இல்லாத "ப்ராம்ஹம்" முதலிய விவாஹங்களில்கூட "தத்தை" முதலியவர்களை வர்ஜிக்கவேண்டும் என்பது ஒன்று மற்றொன்று வேறுவழியில்லாத வளை ஜாதக பாவம் மிகவும் பொருத்தமாக இருக்கும் பக்ஷத்தில் "நக்னிகையை" தவிர மற்ற பதினான்கு பேர்களையும் விவாஹம் செய்துகொண்டால் அவ்வளவாக தோஷமில்லை—என்பது.

**नक्षत्रनामा नदीनामा वृक्षनामाश्च गर्हिताः ॥**

*நக்ஷத்ர நாமா நதீ3நாமா வ்ருக்ஷ நாமா: ச க3ர்ஹிதா: ॥*

நக்ஷத்திரத்தின் பெயரை உடைய கன்னிகைகளும், நதியின் பெயரை உடைய கன்னிகைகளும், மரத்தின் பெயரை உடைய கன்னிகைகளும், வரிக்கத்தகாதவர்கள்.

நக்ஷத்திரப்பெயர் உடையவர்கள்:- ரோஹிணீ, சித்ரா, முதலியப் பெயருள்ளயவர்கள்.

நதியின் பெயர் உடையவர்கள்:- கங்கா, யமுநா, காவேரி, முதலிய பெயருடையவர்கள்.

மரத்தின் பெயரையுடையவர்கள்:- சிம்சுபா, காஞ்சா, முதலிய பெயருடையவர்கள். (13)

**सर्वाश्च रेफलकारोपान्ता वरणे परिवर्जयेत् ।**

*ஸர்வா:ச ரேப2லகாரோபாந்தா வரணே பரிவர்ஜயேத் ॥* (14)

எந்த கன்னிகையின் பெயரில் கடைசி எழுத்திற்கு முதல் எழுத்தாக "ர," "ல," இவை இருக்கின்றனவோ அவர்களையும் வர்ஜிக்கவேண்டும். உதாரணமாக "கௌரி" என்ற பெயரில் கடைசி எழுத்து, "ஈ" அதற்கு முதல் எழுத்தாக "ர" இருப்பதால் அப்பெயர் கொண்ட கன்னிகை வரணத்திற்கு உரியவளல்ல. இம்மாதிரியே "ஸுசீலா" "காலி" முதலிய பெயருள்ளவர்களும் தகுதியற்றவர்களே.

இந்த ஸூத்திரத்தில் "ச" என்றிருப்பதால் முன் ஸூத்திரத்தி

விருந்து "கர்ஹிதா" என்பது அநுவிருத்திக்கும் பொழுதே மறுபடியும் "வரணே பரிவர்ஜயேத்" என்று போடப்பட்டிருப்பதற்கு தாத்பர்ய தர்சனத்தில் அடியிற்கண்டவாறு அபிப்ராயம் கூறப்பட்டிருக்கிறது.

பெண்ணுக்கு மற்ற அம்சங்கள் எல்லாம் மிகவும் திருப்தி கரமாகவும் இருந்து, வரனுக்கும் வேறு கன்னிகையை மணம் செய்துகொள்ள வழியில்லாமலுமிருந்தால் "கௌரீ" முதலிய பெயருள்ள பெண்களை கட்டாயம் வர்ஜித்தே தீரவேண்டுமென்பதில்லை. "ஸகோத்ரையான பெண்ணை ஒருக்காலும் மணந்து கொள்ளக்கூடாது" என்ற நிஷேதம் போல் அல்ல இந்த நிஷேதம் என்றவாறு. (14)

## ரித்3தீ4 பரீக்ஷை.

## शक्तिविषये द्रव्याणि प्रतिच्छन्नान्युपनिधाय ब्रूयादुपस्पृशेति ।

ச1க்திவிஷயே த்ரவ்யாணிப்ரதிச்சந்நாந்யுபநிதா4ய ப்3ரூயாது3பஸ்ப்ருசே1தி

ஒரு கன்னிகையை மணந்துகொள்ளுவதற்கு முன் அவளை மணந்துகொண்டால் வரன் பல நன்மைகளுடன் சுபிக்ஷமாக வாழமுடியுமா! என்பதை முன்னமே அறிய இந்த சூத்திரம் முதல் 18-வது சூத்திரம் முடிய சில பரீக்ஷைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இதற்கு "ரித்3தீ4 பரீக்ஷை எனப்பெயர்.

**शक्तिविषये**– வரனைச்சேர்ந்தவர்களின் சாமர்த்தியத்திற்கு அவகாசம் ஏற்படும் பக்ஷத்தில், அதாவது வரனைச்சேர்ந்தவர்கள் பரீக்ஷை செய்ய விரும்புவதை பெண்ணைச்சேர்ந்தவர்கள் ஏற்றுக் கொண்டால், (இவ்விதம் கூறப்பட்டிருப்பதால் இந்த பரீக்ஷை அவசியம் செய்தே தீரவேண்டுமென்ற நியமமில்லை. வேறு ஜோதிஷம் முதலியவற்றாலும் பெண்ணின் யோகபாவத்தை அறியலாம் என்றே ஏற்படுகிறது.) **द्रव्याणि**– அடுத்தசூத்திரத்தில் கூறப்படும் சில திரவ்யங்களை **प्रतिच्छन्नानि**– மண் உருண்டைகளில் மறைத்து வைத்து **उपनिधाय,** அந்த உருண்டைகளை எல்லாம் ஒரே காலத்தில் கன்னிகைக்கு எதிரில் வைத்து, **उपस्पृशेति** இந்த உருண்டைகளுள் ஏதாவது ஒன்றைத்தொடு என்று **ब्रूयात्** கூற வேண்டும். (பெண்ணைப்பார்த்து வரனே அல்லது வரனைச்சேர்ந்தவனே கூறலாம்.) (15)

அப்படி மறைத்து வைக்கப்படவேண்டிய திரவ்யங்களாவன:—

## नानाबीजानि संसृष्टानि वेद्याः पांसून् क्षेत्राल्लोष्टं शकृत् श्मशानलोष्टमिति ॥



நாநாபீ3ஜாநி ஸம்ஸ்ருஷ்டாநி, வேத்3யா: பாம்ஸூந், க்ஷேத்ரால் லோஷ்டம், ச1க்ருத், ச1மசா1நலோஷ்டமிதி (16)

**संसृष्टानि नानाबीजानि**– ஒன்றாகக்கலக்கப்பட்ட நெல், யவம் முதலிய பல தான்ய விதைகள், **वेद्याः पांसून्**– ஸோமயாகத்தைச் சேர்ந்த வேதியின் மணல், **क्षेत्राल्लोष्टम्** பயிருள்ள வயலிலுள்ள ஓர் சிறிய ஓடு, **शकृत्**– பசுவின் சாணம், **श्मशानलोष्टमिति** மசானத்திலிருந்து கொண்டுவரப்பட்ட ஓர் சிறிய ஓடு, இவ்வைந்தையும் ஐந்துமண் உருண்டையில் மறைத்து வைக்கவேண்டும். (16)

## पूर्वेषामुपस्पर्शने यथालिङ्गमृद्धिः ।

பூர்வேஷாமுபஸ்பர்ச1நே யதா2லிங்க3ம்ருத்3தி4: ॥ (17)

**पूर्वेषामुपस्पर्शने**– முதலாவதாகக்கூறப்பட்ட நான்கு திரவ்யங்களையும் தொட்டால் **यथालिङ्गम्**– அந்தந்த திரவ்யத்திற்குத் தகுந்தாற்போல் **ऋद्धिः**– நன்மை ஏற்படும் (என்று அறிய வேண்டும்.) அதாவது நெல் முதலிய பல தான்யங்களைக் கொண்ட உருண்டையைத்தொடும் கன்னிகையை மணந்து கொண்டால் பிரஜைகள் விருத்தியாகுமென்றும், வேதியின் மணலைத்தொட்டால் யாகம் முதலிய ஸத்கார்யங்களைச் செய்யக்கூடுமென்றும், வயலிலிருந்து கொண்டுவரப்பட்ட ஓடு உள்ள உருண்டையைத்தொட்டால் பயிர்கள் விருத்தியடையுமென்றும், சாணத்துடன் கூடிய உருண்டையைத்தொட்டால் பசுக்கள் விருத்தியாகுமென்றும் அறிந்துகொள்ளவேண்டும்.

ஆதலால் மேற்கூறிய நான்கு உருண்டைகளையும் தொட்ட பெண்களை மணந்துகொள்ளலாம் என்பது கருத்து. (17)

## उत्तमं परिचक्षते ॥

உத்தமம் பரிசக்ஷதே ॥ (18)

**उत्तमं** கடைசியாகக்கூறப்பட்ட ச்மசானத்திலிருந்து கொண்டுவரப்பட்ட ஓட்டை **परिचक्षते**– (சிஷ்டர்கள்) நிந்திக்கின்றனர். அதாவது ச்மான ஓடுடன் கூடிய உருண்டையைபெண்தொட்டு விட்டால் அந்தப்பெண்ணை மணந்துகொள்ளக்கூடாது. அந்தப் பெண்ணோ அல்லது அதற்குப் பிறக்கும் குழந்தைகளோ நீண்ட ஆயுளுடன் வாழாது என்பதையே அது குறிப்பிடுகிறது.

## बन्धुशीललक्षणसम्पन्नामरोगामुपयच्छेत ॥

ப3ந்து4சீ1லலக்ஷண ஸம்பந்நாமரோகா3முபயச்சே2த ॥ (19)

**बन्धु शील लक्षण संपन्नां**– பந்து, நல்லொழுக்கம், அழகு இவை பொருந்தியவளாயும், **अरोगां**– க்ஷயம், அபஸ்மாரம்,

குஷ்டம் முதலிய ரோக வியாதியற்றவளாயுமுள்ள (பெண்ணையே) उपयच्छेत- மணந்துகொள்ளவேண்டும்.

## வர குணங்கள்.

**वन्धुशील लक्षणसम्पन्नः श्रुतवान् अरोगइति वरसम्पत् ॥**

ப3ந்து4சீலலக்ஷண ஸம்பந்ந: ச்ருதவாந் அரோக3 இதி வரஸம்பத் ॥ (20)

**वन्धुशीललक्षण संपन्नः**- பந்துக்கள், நல்லொழுக்கம் அழகு இவை பூர்ணமாக உள்ளவனும், **श्रुतवान्**- வேதங்களை அத்யயனம் செய்து அவற்றின் அர்த்தங்களை உணர்ந்தவனும், **अरोगः**- ரோக வியாதியற்றவனுமாய், (இருப்பவனே சிறந்த வரன்) **इति**- இவ்வாறு **वरसंपत्**- வரனுடைய குணங்கள் கவனிக்கப்படவேண்டும். மேற்கூறிய குணங்களைப்பெற்றவனுக்கே கன்னிகையை தானம் செய்யவேண்டுமென்பது கருத்து.

**यस्याम् मनश्चक्षुषोर्निबन्धः तस्यामृद्धिः, नेतरदाद्रियेतेत्येके ॥**

யஸ்யாம் மந: சக்ஷுஷோர்நிப3ந்த4: தஸ்யாம் ருத்3தி4: ।
நேதரதா3த்3ரியேதேத்யேகே ॥ (21)

**यस्यां**- எந்த கன்னிகையிடத்தில் **मनश्चक्षुषो निबन्धः** (வரனுடைய) மனது, நேத்ரம் இவ்விரண்டும் ஈடுபடுகின்றனவோ, **तस्यां** அவள் மணந்துகொள்ளப்படும் பக்ஷத்தில் **ऋद्धिः**- தர்மம் அர்த்தம் முதலியவை விருத்தியடையும். **इतरत्**- மற்ற குண தோஷங்கள் **नाद्रियेत**, கவனிக்கப்படவேண்டியதில்லை. **इति** என்று **एके** சிலர் கருதுகின்றனர்.

இதனால் மனதிற்கும் கண்களுக்கும் பிடித்த பெண் யாராக இருந்தாலும் விவாஹம் செய்துகொள்ளலாம் என்று கூறப்பட்டதாக கருதக்கூடாது. ஜோதிஷ சாஸ்திரத்தைக்கொண்டோ அல்லது, முன் சூத்திரங்களில் விளக்கப்பட்ட சில உபாயங்களைக்கொண்டோ கன்னிகையின் யோக்யதையை பரீக்ஷிக்கலாம். அல்லது கன்னிகையைப்பார்த்ததும், வரனின் மனதும், நேத்திரமும் விசேஷமாக ஈடுபடும் பக்ஷத்தில் மேற்படி பரீக்ஷைகளுள் ஒன்றையும் சோதனை செய்யாமலே மணந்துகொள்ளலாம் என்பதுதான் கருத்து. ஆதலால் ஸகோத்ரை, தத்தை முதலிய கன்னிகைகளை வர்ஜிக்கவேண்டியதுதான் என்பதில் யாருக்கும் அபிப்ராய பேதம் கிடையாது.

**इत्यापस्तम्बीये गृह्यसूत्रे तृतीयः खण्डः**
**समाप्तश्चप्रथमः पटलः**

இவ்வாறு ஆபஸ்தம்பகிருஹ்யபிரச்னத்தில் மூன்றாவது கண்டம் முற்றிற்று.
முதல் படலமும் முற்றிற்று.



## ஈசாவாஸ்யோபநிஷத்

(முன் இதழ் தொடர்ச்சி)

**हिरण्मयेन पात्रेण सत्यस्यापिहितं मुखम् ।**
**तत्त्वं पूषन्नपावृणु सत्यधर्माय दृष्टये ॥** 15

இந்த மந்திரத்தால் கர்மாவையும் அபரபிரும்ம உபாஸனத்தையும் ஸமுச்சயமாக அநுஷ்டிக்கின்றவன், அவனுடைய கடைசி காலத்தில் அவன் செல்லவேண்டிய மார்க்கத்தை ஆதித்யாந்தர்வர்த்தியான பரமாத்மாவிடம் பிரார்த்திக்கின்றான்.

பூஷந்- ஆதித்யாந்தர்வர்த்தியான பரமாத்மாவே! ஹிரண்மயேந- ஜ்யோதிர் மயமான, பாத்ரேண- உனது மண்டலத்தினால் ஸத்யஸ்ய மண்டலத்திலிருக்கின்ற ப்ரம்ஹத்தினுடைய முக2ம் த்வாரமானது (ஸ்வரூபமானது) அபிஹிதம்- மறைக்கப்பட்டிருக்கிறது. தத் அதை, ஸத்யத4ர்மாய- (ஸத்யஸ்வரூபமான பிரம்மத்தை உபாஸிப்பதால் உபாஸனமும் ஸத்யம்.) அத்தகைய ஸத்யமான உபாஸனம் என்ற தர்மத்தை உடைய என்பொருட்டு அல்லது, ஸத்யமான தர்மத்தை அநுஷ்டிப்பவனின் பொருட்டு த்3ருஷ்டயே ஸத்யஸ்வரூபியான ஆத்மாவின் ஞானத்திற்காக அபாவ்ருணு- விலகும்படி செய்யுங்கள். (15)

**पूषन्नेकर्षे यम सूर्य प्राजापत्य व्यूह रश्मीन् समूह ।**
**तेजो यत्ते रूपं कल्याणतमं तत्ते पश्यामि ॥**
**यो सावसौ पुरुषस्सोऽहमस्मि ॥** 16

பூஷந்- உலகங்களையெல்லாம் போஷிப்பவரே ஏகர்ஷே- ஒருவராகவே செல்லக்கூடியவரே!, யம- எல்லாவற்றையும் அடக்கி ஆளுகின்றவரே!, ஸூர்ய- கிரணங்கள், பிராணன், ஜலம் இவற்றை ஸ்வீகரத்துக்கொள்ளுகின்றவரே!, ப்ராஜாபத்ய- ப்ரஜாபதியின் புதல்வரே!. ரச்மீந்- உங்களுடைய கிரணங்களை, வ்யூஹ- விலக்கிக்கொள்ளுங்கள். ஸமூஹ- தாபத்தை உண்டுபண்ணும் தங்களுடைய ஒளியை அடக்கிக்கொள்ளுங்கள் யத் யாதொரு, தே- தங்களுடைய கல்யாணதமம்- மிகவும் மங்களகரமான, ரூபம்- ஸ்வரூபம் உண்டோ தத்-அதை, தே-தங்களுடைய அருளால் பச்யாமி- பார்க்கின்றேன்.

ஏதோ வேலைக்காரன் யஜமானனிடம் யாசிப்பதுபோல் நான் தங்களிடம் யாசிப்பதாக நினைக்கவேண்டாம். அஸௌ புருஷ:- ஆதித்யமண்டலத்தில் பிரகாசிக்கும் புருஷன், யோ அஸௌ- எவருண்டோ, ஸ:- அவராகவே, அஹமஸ்மி- நான் இருக்கிறேன்.

ஆதித்யாந்தர்வர்த்தியான புருஷனை பேதமன்னியில் உபாஸனம் செய்தவனுக்கு அந்த புருஷனுடைய ஸ்வரூபத்தை தரிசனம் செய்ய உரிமையுண்டு என்பதை யோஸாவஸௌ என்ற பகுதி வெளியிடுகிறது. (16)

वायुरनिलममृतमथेदम् भस्मान्तं शरीरम् ।
ओं क्रतो स्मर कृतं स्मर क्रतो स्मर कृतं स्मर ॥ 17

வாயு:- (இறக்கப்போகும் என்னுடைய) பிராணன் அநிலம்ருதம்- ஸூத்ராத்மஸ்வரூபத்தை (அடையட்டும்) இறந்தபின் இவ்வுடலில் உள்ள வாயு அத்யாத்ம பாவத்தை விட்டு, அதிதைவபாவத்தை அடையட்டும் என்பது கருத்து. (மேலே லோகாந்தரம் செல்லும் மார்க்கம் யாசிக்கப்படுகின்றபடியால், உபாஸனத்தாலும், கர்மாவினாலும் ஸம்ஸ்கிருதமான லிங்கசரீரம் கிளம்பிச்செல்லட்டும் என்றும் இங்கு வேண்டிக்கொள்ளப்பட்டதாக வைத்துக்கொள்ளவேண்டும்.) அத2- பிறகு, இத3ம் ச1ரீரம்- இந்த உடல் ப4ஸ்மாந்தம்- அக்னியில் ஆஹுதி செய்யப்பட்டு சாம்பலாக ஆகட்டும். ஓம் பிரணவ ப்ரதீகமான, (அதாவது பிரணவத்தில் உபாஸிக்கப்படுகின்ற) ஏ பிரும்மமே! க்ரதோ- ஸங்கல்பஸ்வரூபியே ஸ்மர- என் விஷயமாக ஸ்மரிக்கவேண்டியவற்றை, (அதாவது எனக்கு அளிக்கவேண்டியவற்றை,) ஸ்மரித்துக்கொள்ளுங்கள். க்ருதம்- பால்யம் முதல் என்னால் செய்யப்பட்ட கார்யங்களை ஸ்மர- நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

க்ருதோ ஸ்மர க்ருதம் ஸ்மர- என்று இவ்விஷயத்தில் அதிக ஆதாவைக் காட்டுவதற்காக இரண்டாவது தடவையாகவும் கூறப்பட்டிருக்கிறது. (17)

अग्ने नय सुपथा राये अस्मान् विश्वानि देव वयुनानि विद्वान्
युयोध्यस्मज्जुहुराणमेनो भूयिष्ठां ते नम उक्तिं विधेम ॥ 18

இந்த மந்திரத்தால் உபாஸகன் செல்லவேண்டிய மார்க்கத்தை அக்னியிடம் யாசிக்கின்றான்:-

ஹே அக்3நே தேவ- அக்னி தேவனே! விச்1வாநி வயுநாநி (நாங்கள் செய்த) எல்லா கர்மாக்களையும் உபாஸனங்களையும், வித்3வாந்- அறிந்த தாங்கள், அஸ்மாந்- எங்களை, ராயே கர்மா, உபாஸனம் இவற்றின் பலத்தை அனுபவிப்பதின் பொருட்டு

ஸுபத2ா- நல்வழியில், அதாவது உத்தராயண மார்க்கத்தால் நய- அழைத்துச்செல்லுங்கள் (மேலும்) ஜுஹுராணம்- மிகக் குடிலமான, ஏந:- பாபத்தை, அஸ்மத்- எங்களிடமிருந்து, யுயோதி4 பிரித்துவிடுங்கள். அதாவது அழித்துவிடுங்கள், தே-



உமக்கு, பூ4யிஷ்ட2ாம் மிகவும் அதிகமான நம உக்திம் நமஸ்கார வசனத்தை, விதே4ம- செய்கின்றோம். கடைசி காலத்தில் வேறு விதமான சிச்ருஷை செய்யமுடியாததால் நமஸ்காரம் என்று மட்டும் கூறுகின்றோம் என வேண்டிக்கொள்ளப்படுகிறது. (18)

## ஆறுவித தாத்பர்யலிங்கங்கள்.

உபனிஷத்துக்கள் எல்லாம் அத்விதீய ஆத்மஸ்வரூபத்தையே நிரூபணம் செய்கின்றன என்றும், அதற்கென்றே வேறு சில விஷயங்களையும் ஆங்காங்கு நிரூபணம் செய்கின்றன என்றும், அத்வைதிகளின் சித்தாந்தம். ஒரு கிரந்தத்தின் தாத்பர்யத்தை அடியிற்கண்ட ஆறு காரணங்களால் நிர்ணயம் செய்யவேண்டுமென்றும் சாஸ்திரங்களின் முடிவு. அவை யாவன:- (1) உபக்கிரம-உபஸம்ஹாரம் (2) அப்யாஸம், (3) அபூர்வதா, (4) பலம், (5) அர்த்தவாதம், (6) உபபத்தி.

இந்த ஈசாவாஸ்யோபநிஷத்திலும் அத்விதீய ஆத்மஸ்வரூபமே பிரதிபாதனம் செய்யப்படுகிறது என்று மேற்படி ஆறு காரணங்களைக்கொண்டு தீர்மானிக்கப் பட்டிருக்கிறது. "ஈசாவாஸ்யம்" என்று ஆரம்பத்தில் உள்ள மந்திரமும் "யோஸாவஸௌ புருஷ: ஸோஹமஸ்மி" என்று கடைசியில் உள்ள மந்திரமும் அத்விதீய ஆத்மஸ்வரூபத்தை பிரதிபாதனம் செய்கின்றன.

"அநேஜதேகம்" "ததேஜதி தந்நைஜதி" முதலிய மந்திரங்களில் "அப்யாஸம்"

"நைநத்தேவா ஆப்நுவந் பூர்வம்" என்பதால் 'அபூர்வத்வம்'

"தத்ர கோ மோஹ: க: சோக" என்ற மந்திரத்தில் "பலம்"

அஸுர்யா நாம தே லோகா" முதலிய மந்திரங்களால் பேததர்சனத்தை நிந்தித்து அபேத தர்சனத்தை துதித்திருப்பதால் "அர்த்தவாதம்"

"தஸ்மிந்நபோ மாதரிச்1வா ததாதி" முதலியவற்றால் 'உபபத்தி"

ॐ पूर्णमदः पूर्णमिदं पूर्णात्पूर्णमुदच्यते ।
पूर्णस्य पूर्णमादाय पूर्णमेवावशिष्यते ॥
ओं शान्तिः शान्तिः शान्तिः

முற்றிற்று.

# திருவாய்மொழி அநுபவம்.

நாவல்பாக்கம், ஸ்ரீதேவநாதாச்சாரியார்.

(முன் இதழ் தொடர்ச்சி)

'உயர்வற உயர்நலமுடையவன் யவனவன்:-

கருத்துரை:-

ஸ்ரீய:பதியான ஸ்ரீமந்நாராயணன் எண்ணிறந்த நல்ல குணங்களுக்கெல்லாம் உறைவிடமானவன். உலகில் மிகவும் உயர்ந்தனவாகத்தோன்றும் ஸகலமான பதார்த்தங்களையும் விட பல்லாயிரமடங்கு, எம்பெருமானுடைய குணங்கள் உயர்ந்தவை. இந்த குணங்களின் உயர்த்தியை நோக்குங்கால் மற்றப் பொருள்களில் சிறிதளவும் உயர்த்தியில்லையென்னும்படியிருக்கும். இந்த நற்குணங்களையுடையவனை எம்பெருமானை உள்ளபடி அறிந்து அநுபவிக்கும் பாக்யம் பெறாதவர்களுக்கே மற்றப் பொருள்கள் உயர்ந்தனவாகத்தோன்றும். (சூரியன் பிரகாசிக்காத) இரவு காலங்களில் விளக்கின் உதவியால் ஸஞ்சாரம் செய்கிறவன் சூரியோதயமான பிறகு அவ்விளக்கின் சகாயத்தை விரும்பமாட்டான். விளக்குகொடுக்கும் பிரகாசத்தைப்போல் எத்தனைமடங்கு அதிகமானது சூரியப்பிரகாசம்? இதை யாராவது அளவிட்டுச்சொல்லமுடியுமா? அவ்விதமே பகவானுடைய நற்குணங்கள் ஒருவனுடைய மனதில் பிரகாசிக்குமாயின் அவன் வேறு வஸ்துக்களைப்பொருட்படுத்த மாட்டான்.

அந்த குணங்கள் ஜ்ஞாநம், சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம் தேஜஸ், ஸத்யகாமத்வம், ஸத்ய ஸங்கல்பத்வம், ஆனந்தம், வாத்ஸல்யம், ஸௌலப்யம், ஸௌசீல்யம், தயை, ஸாம்யம், க்ருதஜ்ஞத்வம், முதலியன. இவைகள் வேதங்களிலும், உபநிஷத்துக்களிலும், பரக்கப்பேசப்பட்டுள்ளன. இவைகளை உடையவன் எம்பெருமான். "உடையவன்" என்றது. "மேற்சொல்லிய நற்குணங்கள் இயற்கையாகவே அமைக்கப்பெற்றவன்" என்பதைக்குறிக்கும். எம்பெருமான் அவைகளை விடவேண்டுமென்று விரும்பினாலுங்கூட - இவனாலும் விடமுடியாது, அவைகளும் இவனிடமிருந்து விலகிநிற்கமாட்டாதவை என்று கூறினாராயிற்று. திருத்துழாய்ச்செடி (துளஸிச்செடி) முளைக்கும்பொழுதே, சிறந்த மணத்துடன் முளைக்கும். செடிமுளைத்தபின் வேறு எங்கிருந்தாவது வாஸனை அதில்வந்து சேருகிறதில்லை. அவ்விதமே இங்கும் கண்டுகொள்வது.

இந்த குணங்கள் உள்ளவனாகையால் எம்பெருமான் மற்றெல்லாரையும் விட மிகவும் உயர்ந்தவன். ஒப்புயர்வற்றவன். பக



வானுடைய ஸ்வரூபத்தின் தனிப்பெருமையை நோக்குங்கால் இவ்விதமாகவும் பொருள் கொள்வது பொருந்தும். எம்பெருமான் மற்றப்பொருள்கள் யாவற்றினும் முற்றிலும் வேறுபட்ட அற்புதமான ஆனந்தமயமான, வடிவமுடையவன். தோஷங்களற்றவன். இவனிடம் இயற்கையாய் அமையப்பெற்று விளங்குவதனால், அக்குணங்கள்தான் சிறப்பெறுகின்றனவேயன்றி, அவைகளால் இவனுக்கு ஏற்றமுண்டாகிறதென்பதில்லை. இக்குணங்களுள் ஒன்றான "ஆனந்தம்" என்பதைச்சொல்லத் தொடங்கின தைத்திரீயோபநிஷத் பலவாறாக முயன்றுபார்த்தும் அக்குணத்தின் எல்லையைக்காண முடியாமல் ஓய்ந்துபோயிற்று. தன்தோல்வியைத்தானே தெளிவாக ஒப்புக்கொண்டு வேறுவிஷயத்தில் சென்றது.

यतो वाचो निवर्तन्ते
अप्राप्य मनसा सह

என்பதைக்காண்க.

பகவானுடைய ஆனந்த குணத்தின் எல்லையை அடைய முடியாமல் வார்த்தைகள் (வேதவாக்யங்கள்) மனதுடன் மீண்டன. பகவானுடைய ஆனந்த குணத்தை உள்ளபடி சொல்வதற்குச் சொற்கள் கிடையா. மனதினாலும் எண்ணி அளவிட முடியாது என்று கருத்து.

இங்கு மற்றொரு பொருளும் கூறலாம். மீண்டும் மீண்டும் பகவானுடைய ஆனந்த குணத்தைச் சொல்லுவதிலேயே ஸர்வகாலமும் அவ்வுபநிஷத் ஓயாமல் ஈடுபட்டு நிற்கிறதென்று இவ்விதம் பொருள் கூறுவதற்குப் பொருத்தமும் உளது.

வேதங்கள் அநந்தமானவை. எம்பெருமானுடைய குணங்கள் ஒவ்வொன்றும் அனந்தமானவை. மனிதர்கள்போல் அஜ்ஞானம் அசக்தி முதலிய தோஷங்கள் இல்லாத வேதங்கள் பகவானுடைய ஆனந்த குணத்தைச் சொல்லத்தொடங்கின. எப்பொருளையும் தெளிவாகக் கூறுவதற்கான சொற்களுக்கு வேதங்களில் குறைவுஇல்லை, மிகவும்கடினமான விஷயங்களையும் எளிதில் எல்லோரும் புரிந்துகொள்ளும்படி எடுத்துரைக்கும் திறமையில் வேதம் நிகரற்றது.

இத்தகைய வேதமானது, எம்பெருமானுடைய குணங்களில் ஒன்றான ஆனந்தகுணத்தைச் சொல்லத்தொடங்கிற்று. முதலில் மநுஷ்யானந்தத்தைச்சொல்லிற்று. அதிலிருந்து படிப்படியாகப் பலவிதமான ஆனந்தங்களைச்சொல்லி, முடிவில் பிரம்

மானந்தத்தையும் சொல்லிற்று. இங்கு சொல்லப்பட்ட பலவகையான ஆனந்தங்களில் முந்தியதைக்காட்டிலும், பின்னால் சொல்லப்படுவது நூறுமடங்கு அதிகமானது. அவைகளின் வரிசை வருமாறு:-

1 மனுஷ்யர்களுடைய ஆனந்தம்.
2 மனுஷ்ய கந்தர்வர்களுடைய ஆனந்தம்.
3 தேவகந்தர்வர்களுடைய ஆனந்தம்.
4 சிரலோக லோர்களான பித்ருக்களின் ஆனந்தம்.
5 ஆஜானஜதேவர்களின் ஆனந்தம்.
6 கர்மதேவர்களின் ஆனந்தம்.
7 தேவர்களின் ஆனந்தம்.
8 இந்திரனுடைய ஆனந்தம்.
9 ப்ருஹஸ்பதியினுடைய ஆனந்தம்.
10 ப்ரஜாபதியினுடைய ஆனந்தம்.
11 பிரம்மத்தினுடைய ஆனந்தம்.

"ஒருமனிதன் நல்லயௌவன வயதுள்ளவனாயும், தன்னைப் போன்ற பலயுவர்களுக்குப் பலவேறு நூல்களையும் போதிக்கும் திறமைவாய்ந்தவனாகவும் இருக்கவேண்டும். மேலும் நன்றாக உணவு உட்கொள்ளும் சக்தியும், நல்லதிடகாத்திரமும், பலமும், பெற்றிருக்கவேண்டும். அவனுக்கு இவ்வுலகில் எங்கும் ஏராளமான செல்வம் நிறைந்திருக்கவேண்டும். அப்பொழுது அவனுக்கு உண்டாகும் ஆனந்தத்தை எண்ணிப்பாருங்கள். அதுவே "இங்கு மனுஷ்யானந்தம் என்று சொல்லப்படுகிறது"

இதன் பிறகு வரிசையாகக் கூறப்படும் ஆனந்தங்களுக்கெல்லாம் தனித்தனியாக விளக்கம் அவசியமில்லை. அதைநம்மால் பின்பற்றவும் முடியாது. நாம் புரிந்துக்கொள்ளக்கூடிய வகையில் அவைகளைச் சொல்வதற்கு ஒரே வழிதான் உண்டு. அது தான் "ஒன்றைவிட மற்றொன்று நூறுமடங்கு அதிகமானது" என்று கூட்டி அதன்மூலம் அடுத்த ஆனந்தத்தைப்புரிந்து கொள்ளும் வழி. இதுவே வேதத்தால் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வழியில் பேசிக்கொண்டேபோய் முடிவில் பிரம்மானந்தத்தைச் சொல்லிற்று. ஆனால் அப்பொழுதும் அதைஉள்ளபடி சொல்லிவிட்டதாகத் திருப்திப்படமுடியவில்லை. பெருங்கடல் போன்ற அந்தகுணத்தின் கரையருகினுங்கூட சென்றதாக தோன்றவில்லை. ஆனால் இவ்வளவில் வேதம் ஓய்ந்துவிடவில்லை. எப்படியாவது எடுத்தகாரியத்தை முடித்தே தீர்த்துவிடுவதென்று ஸங்கல்பம் செய்து கொண்டது.



இதற்காகத்தானும் அதிகமாக சிரமப்படவில்லை. நம்மையும் புதுவழியில் அழைத்துச்செல்லவில்லை. சுகமான உபாயம் ஒன்று கையாளப்பட்டது. முதல்தடவை சொல்லப்பட்ட பிரம்மானந்தம் உண்மையில் பிரம்மத்தினுடைய ஆனந்தமில்லை. அதைக்காட்டிலும் பல்லாயிரமடங்கு குறைந்ததே. ஆதலின் அதைஇரண்டாம் தடவை முதல் படியான மனுஷ்யானந்தத்தின் ஸ்தானத்தில் வைத்துவிட்டு அதிலிருந்து மீண்டும் முன்புபோன வழியிலேயே கூட்டிக்கொண்டுபோய் 11வது ஆனந்தம் பிரம்மானந்தம் என்று அறுதிடப்பார்த்தது.

ஆனால் இம்முறையும் பயனளிக்கவில்லை. பிரம்மானந்தத்தை உள்ளபடி சொல்வதற்கு இன்னும் தொலைதூரம் செல்லவேண்டியிருக்கிறது. இதற்காக வேதம் சிறிதும் தயங்கவில்லை. மீண்டும் முன்போலவே நுனியை அடியில்வைத்து 11முறை அப்யாஸம் செய்தது. இப்படி பல்லாயிரம் தடவைகள் திரும்ப திரும்ப அப்யாஸம் பண்ணிக்கொண்டே போனாலும் தொடங்கின காரியம் பூர்த்தியாவதில்லை. வேதமும் ஓய்வதில்லை.

இதன் முடிவுதானென்ன? இத்துறையில் வேதவாக்யங்கள் வெற்றி அடைந்தனவா? இல்லையா? இக்கேள்விக்குவிடை வேதத்தில் கிடையாது. ஏனெனில் அதன் முயற்சி ஓய்ந்தாலல்லவா வெற்றி அல்லது தோல்வி இரண்டிலொன்றைக்கூறுவது ஸாத்யமாகும். அதுதான் இன்னும் ஓயாமல் முயன்றுகொண்டேயிருக்கின்றதே. இதில் தடஸ்தராகிய நம்போல்வார் தாமே தீர்ப்புக்கூறிக்கொள்ளவேண்டும்.

வேதங்களே திகைத்துத் தடுமாறிக்கொண்டிருக்கும் இது போன்ற பிரச்னைகளில் முடிவுகாணுவது மிகமிகக்கடினமல்லவா? இதில் ஸாதாரணமான அறிவுபடைத்தவர்கள் என்னசெய்ய முடியும்? சிறந்த பக்தரும், ஞானியுமாகிய நம்மாழ்வார் அற்புதமான தமது தீர்ப்பைக் கூறியுள்ளார். விஷயத்தின் பெருமையை நோக்கி அதற்கேற்ப ஆழ்வார் கூறும் தீர்மானமும் சிக்கலானதாய் எளிதில் புரிந்துகொள்ளமுடியாததாயிருக்கும் என்றுநாம் அஞ்சுவது இயற்கையேயாகும். ஆனால்உண்மை அவ்விதமில்லை நம்பால் பரிவுடன் தாய்போல் ஆழ்வார் அளிக்கும் தீர்ப்பு தாய்ப்பால் போல் இனிமையானதும், இணையற்றதும் எல்லோரும் எளிதில் புரிந்துக்கொள்ளக்கூடியது மாகும்.

இனி ஆழ்வார்கூறும் முடிவைக்கவனிப்போம். உயர்வற உயர்நலமுடையவன் யாவன்—அவனே பரப்பொருளாகிய ஸ்ரீமந்நாராயணன்; என்பதே அது. இதில் மேற்கண்டசர்ச்சை

கள் எல்லாம் ஒரேயடியில் தீர்ந்துவிடுகின்றன. இதுவே வேதத்தினுட்கருத்துமாகும். "எம்பெருமானுடைய ஆனந்தம் உயர்வற உயர்ந்தது" என்பது 4 வார்த்தைகளில் அடங்கியுள்ளது. இதை இவ்விதம் தெளிவாகச்சொல்லமாட்டாமல் உலகெல்லாம் வளைத்துச்சுற்றிக்கொண்டு குழப்புகின்றன வேதவாக்யங்கள்.

ஆனந்த குணத்தைச்சொல்லி அதன்மூலம் பகவானைக்காண்பிக்கும் வகையில் வேதங்களைக் காட்டிலும் ஆழ்வார் எவ்வளவு முன்னேற்றம் அடைந்துள்ளார் பாருங்கள்.

ஆழ்வார் தழுவியமுறையில் சிறுகுழந்தைமுதல் வயதுமுதிர்ந்தவர் வரைக்கும், எழுத்தறிவில்லாதவன் முதலாக, நிரம்பக் கல்விபயின்று, தத்வங்களையெல்லாம் நன்குணர்ந்த அறிவாளிகள் வரைக்கும் "கடவுள் என்பதையே சிந்தித்தறியாதவன் முதல் ஸர்வகாலமும் பகவானையே இடையுறுமல் த்யானம் செய்யும் யோகிவரைக்குமுள்ள எல்லாவிதமானவர்களுக்கும் எளிதில் நன்றாகப்புரிந்து கொள்ளும்படி எவ்விதமான நிர்ப்பந்தங்களுமின்றி பகவானைச்சொல்லித்தருவது ஸாத்யமாகும். ஒவ்வொருவனும் உயர்ந்தபொருள் என்று எதைத்தன் அனுபவத்தில் கண்டு வருகிறானோ அதையெல்லாம் விடப்பன்மடங்கு உயர்ந்தவன் எம்பெருமான். இந்த வார்த்தையைப்புரிந்து கொள்வதில் யாருக்கும் எவ்விதமான கஷ்டமும் இருக்கமுடியாது.

அவரவர்கள் தாங்கள் மனதில் அறிந்துகொண்டுள்ள பொருளையே கடவுளைக்காண்பித்துக்கொடுக்கும் கருவியாக உபயோகித்துக் கொள்ளும்படி ஆழ்வார் செய்துள்ளார். இதில் இன்னுமொரு விசேஷம். பலதரப்பட்டவர்களால் பல்வேறு நிலைமைகளில் பயிலப்படும் இத்திருவாய்மொழி அந்தந்த வாசகர்களின் சக்திக்கேற்றவாறு, பலவிதமான தத்வத்தை உணர்த்துகின்றது.

கணக்குப்பரீக்ஷைகளில் சிலர் தாங்கள் எடுத்துக்கொண்ட கணக்கின் விடையை மனதில் நன்குபுரிந்துகொண்டிருப்பார்கள் ஆனால் அதை எழுதும்போது தவறானவழியில் எழுதத்தொடங்கிவிடுவார்கள். அதனால் எவ்வளவு நேரம் முயன்றாலும் தங்கள் மனதில்உள்ள சரியான விடையை முறைப்படி கொண்டுவருவதற்கு அவர்களால் முடியாது. அதேகணக்கைச்சிலர் வேறுவழியில் போய்ச்சிறிதும் சிரமமின்றி தெளிவாய்ப்போட்டு விடை கூறிவிடுவார்கள். இதில் முதல் வகையைச்சார்ந்தன வேதங்கள். இரண்டாம் வகையைச்சேர்ந்தவர் ஆழ்வார்.

இவ்விஷயத்தை நன்கு உணர்ந்தவரான ஸ்ரீஆளவந்தார் தன்னுடைய ஸ்தோத்ர ரத்னத்தில் கூறுவதாவது.



उपर्युपर्यब्जभुवोऽपिपूरुषान् प्रकल्प्य तेयेशतमित्यनुक्रमात्
गिरस्त्वदेकैकगुणावधीप्सया सदास्थिता नोद्यमतोऽतिशेरते ॥

"ஹே புருஷோத்தமா, உன்னுடைய ஒவ்வொரு குணத்தினுடையவும் எல்லையைக்காண்பதின் பொருட்டு "தேயேசதம்" என்றுதொடங்கி பலதரப்பட்ட அந்தஸ்து உள்ளவர்களையும் தன்னிஷ்டம்போல் கற்பனையால் ஸ்ருஷ்டிசெய்து ஸர்வகாலமும் வேதவாக்யங்கள் முயன்றுவருகின்றன. அவைகள் இன்னும் எக்காலத்திலும் முயற்சியிலேயே இருக்கவேண்டியவைகளேயன்றி அதைமுடித்து அடுத்தபடியை (முயற்சியின் பயனை) நெருங்கமுடியாமல் திணறுகின்றன என்பது இதன் கருத்து.

இதனால் நித்யமான தோஷமற்ற வேதங்களைக் குறைவாகக் கூறியதாகக் கொள்வது உசிதமில்லை. அதில் கூறப்படும் உண்மையையே தெளிவாகவும், எல்லோரும் புரிந்துகொள்ளும்படியும் சுருக்கமாகவும் அருளிச்செய்தார். என்பதே கருத்து. இதையே ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகன் "செய்யதமிழ்மாலைகள் நாம் தெளியவோதித்தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே" என்று அருளிச்செய்தார். இதை இத்துடன் நிறுத்தி இரண்டாவது அடியின் கருத்தைக்கவனிப்போம். (தொடரும்)

---

## மரம் வளர்த்தல்.

கௌதுகசிந்தாமணியிலிருந்து எடுக்கப்பட்டது.

### தென்னை மரம்.

உளுந்து, பயறு, முரா என்று ஒருவகை விதை இம்மூன்றும் சேர்த்து கொதிக்கவைத்த ஜலம் குளிர்ந்தவுடன், அத்துடன் மேற்கூறிய மூன்று விதைகளையும் உப்புடன் சேர்த்து பொடி செய்து, கள்ளுடன் கலந்து, இரவுவேளையில் தென்னை மரத்தில் அடிபாகத்தில் பூசிவிட்டால், அதுவரை ஒருகாய் கூட காய்க்காத தென்னை மரம், பெரிதாயும் இனிப்பாயுமுள்ள பல தேங்காய்களை காய்க்க ஆரம்பிக்கும்.

### பிலா மரம்

தாமரை இலைகளைக்கட்டி பிலாவின் அடிமரத்தை மறைத்து வைத்திருந்தால் அந்த மரம் ஏராளமான பழங்களைத் தரும்.

### நார்த்தை மரம்.

வாயுவிடங்கம், எள்ளு, கடுகு, உளுந்து, பசுவின் பால், இவற்றையெல்லாம் ஒன்றாகச் சேர்த்து அரைத்து ஜலத்தில் கலந்து வேரில் ஊற்றி வருவதுடன், முயல் மாம்ஸத்தை அடிமரத்தில் தடவி, அதனால் புகையும் போடப்பட்டால் நார்த்தை மரம் இனிப்பான பல காய்களை காய்க்கும். அல்லது ஏதாவது ஒரு மாம்ஸத்துடன் பசும்பாலையும் வெல்லத்தையும் கலந்து வேரில் ஊற்றிவந்தால் மேற்கூறியபடி காய்களை காய்க்கும்.

---

## சரபேந்திரர்நயனரோகசிகித்சை

ஸரஸ்வதி மஹால் வெளியீடு 4.

**(1) வெள்ளெழுத்திற்கு மருந்து.**

முருங்கை வித்து 100, மிளகு

100, இவ்விரண்டையும் கல்வத்தி லிட்டுத் தண்ணீர் வார்த்தரைத்து, ஒரு தாலத்திலப்பி நல்ல வெய்யிலில் தாலத்தைச் சாய்த்து வைக்க தைல மிறங்கும். இதைக் கடுகளவெடுத்து கண்ணிலிட வெள்ளெழுத்து, பூ, படலம், இவைகள் தீரும்.

---

### நயனரோகத்திற்கு ஆமலகத் தைலம்.

நெல்லிக்காய்ச்சாறு 2 படி, பசுவின்பால் 4 படி, நல்லெண்ணெய் 1 படி, இம் மூன்றையும் ஒன்றாகக்கலந்து. ஒரு பலம் அதிமதுரத்தை ஆவின்பால் விட்டரைத்து மேற்படி சாறுகலந்த எண்ணெயில்குழப்பி, அடுப்பின்மீதேற்றி எரித்து, பதத்தில் வடித்து, தைல பாத்திரத்திற்குச் சந்தனம், புஷ்பம் சார்த்தி, கணபதியைத் தியானித்து, சுதினத்தில் மூழ்கிப்பத்தியமிருந்து வாதஉஷ்ணசம்பந்தமானவிழிரோகங்கள், பல்லசைவு, முதலியவை சில வாரங்களில் தீரும்.

### பித்தவெடி தீர்ந்தது.

மேலும் நீண்ட நாளாக உள்ள குதிகால் பித்த வெடிப்புள்ள ஒரு ஸ்திரீக்கு முற்கூறியதைலம் வடித்த கடுகை, மேலே பூசிவந்ததில் வெடிப்புகள் மூடிவிட்டன. பிறகு 15 வருஷம் வரையில் இந்த வெடிப்பு உண்டாக வில்லை.

---

### கேள்வி - பதில்.

(1) கே:- மாத்ரு பித்ரு தீக்ஷை என்றால் என்ன?

(2) தீக்ஷாகாலத்தில் இறந்து போனவர்களுடைய பெண்ணுக்குக் கல்யாணம் செய்யலாமா?

(3) அப்பொழுது ராமாயணம் முதலியவை பாராயணம் செய்யலாமா?

(4) தனிஷ்டா பஞ்சமி என்றால் என்ன? இதனால் யாருக்காவது கெடுதலோ நன்மையோ உண்டா?

பதில்:- (1) மாதாவோ, பிதாவோ இறந்துபோனால் அவர்களுக்கு உத்திரககிரியையைச் செய்த குமாரன் ஒருவருஷம்வரை அடியிற்கண்ட நியமங்களுடன் இருக்க வேண்டுமென விதிக்கப் பட்டிருக்கிறது. அவற்றிற்குத்தான் தீக்ஷை என்று பெயர்.

அவைகளாவன:—

வபனம் செய்து கொள்ளாமல் இருத்தல், தாம்பூலம், புஷ்பம் சாதனம் முதலியவற்றை வர்ஜித்தல், பிரும்மசர்யத்துடன் இருத்தல், பரான்னத்தை புசிக்காமலிருத்தல். இவ்விஷயத்தில் பலர் பலவித அபிப்ராயத்தை வெளியிட்டிருக்கின்றனர் ஸம்வத்ஸரமுடிவில் ஸபிண்டீகரணம் செய்யும் பக்ஷத்தில் மேற்கூறிய நியமங்கள் மிக அவசியம். 12 வது நாள் ஸபிண்டீகரணம் செய்யும் பக்ஷத்தில் வருஷம் முடிய கேசதாரணம் முதலியவற்றை அநுஷ்டித்தால் மிகவும் விசேஷம். அநுஷ்டிக்காதபோனால் பாதகமில்லை என்று சிலர்.

வேறு சிலர்:- 12 வது நாள் ஸபிண்டீகரணம் ஆகிவிட்டாலும் கேசதாரணம் மட்டும் ஒரு வருஷம் வரை அநுஷ்டிக்கவேண்டியதுதான் மற்ற நியமங்களை அநுஷ்டித்தால் விசேஷம். அநுஷ்டிக்காதபோனால் பாதகமில்லை எனக்கூறுகின்றனர்.

(2) ஒருவருஷத்திற்குள் விவாஹத்திற்கு உரிய வயதாகிவிட்டால் பெண்ணுக்கு விவாஹம்செய்யலாம்

(3) தீக்ஷாகாலத்தில் இராமாயண பாராயணம் முதலியவை காம்யமாக இருந்தால் சிலாக்யமல்ல

(4) 'தனிஷ்டாபஞ்சகம்' என்பது தவறுதலாக 'தனிஷ்டாபஞ்சமி' என எழுதப்பட்டிருக்கலாம் என்று தோன்றுகிறது அவிட்ட நக்ஷத்திரம் பின் ½ பாகம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி இந்த நாலரை நக்ஷத்திரங்கள் தனிஷ்டா பஞ்சகம் எனப்படும். இவற்றில் ஒருவர் மிருதியடைந்தால் மிருதியடைந்த வருக்கும், அவருடைய ஞாதிகளுக்கும் ஆகாது என்று கூறப்பட்டிருக்கிறது. அதற்காக ஸபிண்டீகரணம் ஆன மறுதினமே சாஸ்திரஞர்களால் கூறப்பட்டபடி தனிஷ்டாசாந்தி செய்ய வேண்டியது மிக அவசியம்.

---



## ஸ்நான பலன்.

கி. ரா கிருஷ்ணமூர்த்தி.

"ஸ்நான கட்டம் எங்கே இருக்கிறது?" என்று கோடிக்கரை ஸ்டேஷன் மாஸ்டரை காலை 7மணி ரயிலில் வந்திறங்கிய சுமார் 35 வயது மதிப்பிடக்கூடிய ஸ்திரீயொருவள் கேட்டாள், அவளுடன் இடது கையில் ஒரு பளபளப்பான தோல் பெட்டியுடனும் வலது கையில் பாதி எரிந்த சிகரட்டுடனும் நவீன உடையில் 40வயது மதிப்பிடக்கூடிய அவளுடைய கணவனும் ஏதோ முணுமுணுத்துக்கொண்டே வந்தார். "இதோ முக்கால் மைல் தூரத்தில் சித்தாச்ரமம் இருக்கிறது" என்று தென்மேற்கு திசையில் கையைக் காண்பித்துச்சொன்னார் ஸ்டேஷன் மாஸ்டர். "ருத்ரகோடிக்குப் போக வேண்டுமானால், இவ்விடமிருந்து சுமார் 3 மைல் தூரம் வடகிழக்காக செல்லவேண்டும்" என்று பின்னும் தொடர்ந்து சொன்னார்.

அனந்தகிருஷ்ணய்யரும் ஜகதீச்வரி அம்மாளும் சித்தாச்ரமத்துக்குச்சென்று ஸ்நானத்தை முடித்துக் கொண்டார்கள். "நாம் இனி ஸ்டேஷனுக்குத் திரும்பி 1 மணி ரயிலில் ஊர்போய்ச்சேர வேண்டும்" என்றார் அனந்தகிருஷ்ணய்யர். "ருத்ர கோடிக்குப் போகவேண்டாமா?" என்றாள் ஜகதீச்வரி அம்மாள்.

அனந்தகிருஷ்ணய்யர் மிகுந்த சலிப்புடன் "யாரோ ஒரு மந்திரவாதி உனக்கு தூபம் போட்டு விட்டான். நீயோ பிசாசுபோல் ஆடுகிறாய். ஸமுத்ர ஸ்நானம் செய்யாவிட்டால் புத்திரபாக்யம் ஏற்படாதோ?" என்று கொஞ்சம் கோபமாகவே பேசினார், வடியும் கண்ணீருடன். "நாம் முன்னூறு மைல் தூரத்திலிருந்து ஒரு நம்பிக்கையுடன் தானே இவ்விடம் வந்திருக்கிறோம். அப்படி வந்த பிற்பாடு உடனே திரும்ப வேண்டுமென்று துடிக்கிறீர்களே? இது வரையில் செய்த பாபங்களுக்குப் பிராயச்சித்தமாக எல்லா கட்டங்களிலும் ஸ்நானம் செய்யலாமே!" என்று ஜகதீச்வரி அம்மாள் சொன்னாள். "யார் பாபம் செய்தது? நீ செய்த பாபத்தினால்தான் நான் இப்படி கஷ்டப்பட வேண்டிருக்கிறது" என்று அனந்தகிருஷ்ணய்யர் பரிகாசம் செய்யும் தோரணையில் சொன்னார். "நான் எந்தக் காலத்திலும் பாபம் செய்ததில்லை. செய்யப்போவதுமில்லை. நீங்கள்தான் சண்டை சண்டை என்று சொல்லிக்கொண்டு மிளகு சேர் ரூ. 8 வீதம் விற்கிறீர்கள். ரவாவில் அரிசிமாவைக்கலந்து ரவா வென்று விற்கிறீர்

கள். ஜாடி வியாபாரத்தில் ஜாடிக்கு ஒரு விலையும் அதன் மூடிக்கு ஒரு விலையும் போடுகிறீர்கள். சிமிட்டு மூட்டைகளை இரட்டிப்பு விலைக்கு விற்று அவைகளின் சாக்குகளுக்கும் தனியாகவிலைபோடுகிறீர்கள் இவைகள் பாபமில்லையா? இன்னும் உங்களுடைய அண்ணாவும் மன்னியும் இறந்த பிற்பாடு அவர்களுடைய சொத்தைக் கட்டிக்கொள்வதற்காக அவர்களுடைய ஆண்குழந்தையை எங்கேயோ மறைத்து விட்டீர்களாமே என்று மிகவும் எரிச்சலுடன் கேட்டாள் ஜகதீச்வரி அம்மாள். "வீணாக உளறாதே? நான் ஒன்றும் குழந்தையை மறைக்கவில்லை. தாய் தகப்பன் இல்லாத குழந்தையைக் காப்பாற்றுவதாக ஒரு பிராமணர் கேட்டுக்கொண்டதின் பேரில் அவரிடம் ரூ. 1000 த்துடன் குழந்தையை ஒப்படைத்தேன். மற்றபடி வியாபாரத்தில் கொஞ்சம் தந்திரமாகச் செய்ய வேண்டியது சகஜம் தானே? இதற்கு நீ என்பேரில் பிரமாதமான குற்றம் சுமத்திவிட்டாயே? அப்படிநான் பாபம் செய்ததாகவே இருக்கட்டும், உனக்கும் அதில் பங்கில்லையோ? என்று அனந்தகிருஷ்ணய்யர் கேட்டார்.

"அதில் எனக்கென்ன பங்கு? நானா உங்களை பாபம் செய்யச் சொன்னேன்? என்றாள் ஜகதீச்வரி அம்மாள்." அப்படியானால் எதற்காக இந்த ஸ்நானம் உனக்கு? என் என்னையும் உபத்திரவம் செய்து அழைத்துக் கொண்டு வருகிறாய்? "என்றார் அனந்தகிருஷ்ணய்யர்." உங்களுடன் சேர்ந்திருப்பதால் என்னுடையகதி உங்களுடைய ஞானத்தையும் பாபபுண்யத்தையும் பொறுத்ததாகிறது. ஆகையால்தான் உங்களுடைய பாப நிவாரணத்தில் நான் ஊக்கமாயிருக்கிறேன்" என்று மிகுந்த வினயத்துடன் சொன்னாள் ஜகதீச்வரி அம்மாள். அனந்தகிருஷ்ணய்யர் மறுபடியும் முணுமுணுத்துக் கொண்டே கிளம்பினார் ருத்ரகோடிக்கு.

தம்பதிகள் கடற்கரையோரமாகச் சென்றார்கள். இளம் சூரியன் தன்னுடைய கிரணங்களை படிப்படியாக அதிகப்படுத்திய போதிலும் நீர்த்திவலைகளுடன் வீசிய கடற்காற்று அலைகளுடைய வெப்பத்தை சமனப்படுத்திக் கொண்டிருந்தது. ஒருபக்கத்தில் அகண்ட எல்லையற்ற சமுத்திரம், மற்றொரு பக்கத்தில் ராவணன் முள் படர்ந்த கடற்கரை மனம் கனிந்து பிரகிருதியின் எல்லையில் நிற்கும் ஆத்மாவை வரவேற்கும் விச்வ சைதன்யத்தைப் போல் சமுத்திரத்தின் அலைகள் தம்பதிகளை வரவென்று ஓயாமல் அழைத்தன. சமுத்திரம் பல அலைகளாக எழும்பி மோதி அடங்குவதும் அதனுடைய நீர் நுரைத்து மறுபடி நீராக மாறுவதும் உலகில் நாமரூப பேதங்களுடன் காணப்படும் வஸ்துக்களெல்லாம் உண்மையாகவே ஓர் அகண்ட பரிபூரணமான பரப்ரும்மத்தின் பேதமற்ற அம்சங்களென்பதை கண்கூடாகக் காட்டுவது போலிருந்தன. ஆத்மாவும் ஐம்புலன்களால் தாறுமாறாக இழுக்கப்பட்ட சரீரமும் ஜீவன் முக்தியை நாடி யாத்திரை செய்வது போலிருந்தது ஜகதீச்வரி அம்மாளும் அனந்தகிருஷ்ணய்யரும் ருத்ரகோடிக்குப் போய்ச் சேர்ந்தது.

தம்பதிகள் ருத்ரகோடியில் ஸ்நானத்தை முடித்துக்கொண்டு பக்கத்திலுள்ள நல்ல தண்ணீர்க் குழாயினடியில் அவர்கள் கொண்டு வந்திருந்த பழங்களையும் பக்ஷணங்களையும் உண்டு, தண்ணீர் அருந்திகளைப்பாறினார்கள். எதிரிலுள்ள தீபஸ்தம்பத்தைப் பார்த்துக்கொண்டு மாலை 7 மணி வண்டியை எப்படியாவது பிடித்துவிட வேண்டுமென்று 4 மணிக்கே காட்டுமார்க்கமாகப் பிரயாணமானார்கள். எங்கே பார்த்தாலும் அடர்ந்த புதர்களிலுள்ள செடிகளும் மரங்களும் காற்றில் ஆடிக்கொண்டு இனிய கந்தத்தை வீசிக்கொண்டிருந்தன. மரங்களுக்கிடையிலுள்ள பூமியை பசுமையான புல் அலங்கரித்திருந்தது. புல்லை மேய்ந்து கொண்டிருந்த சுமார் 100 மான்கள் தம்பதிகள் வரும் சப்தத்தைக் கேட்டு துள்ளிக்குதித்து ஓட வாரம்பித்தன. இயற்கையின் வனப்பைக்கண்டு ஆனந்தித்தது போதாமல் கையிலிருந்த தோல்பெட்டியைக் கீழே வைத்துவிட்டு மான்களைத் துரத்தினார் அனந்தகிருஷ்ணய்யர். ஒரு பக்கத்திலிருந்து மான்கள் ஓடுவதைக்கண்டதும் ஆங்காங்குள்ள மான்களும் திடுக்கிட்டு பல திக்குகளிலும் சிதறியோட ஆரம்பித்தன. அனந்தகிருஷ்ணய்யருக்கு உத்ஸாகம் மேலிடவே அருகே கிடந்த கல் ஒன்றை எடுத்து ஒரு மான் கூட்டத்திற்கிடையில் பலமாக அடித்தார். அந்தக்கல் துள்ளியெழும்பிய மான்குட்டி யொன்றின் முகத்தில்படவே அது உடனே சுருண்டு விழுந்து விட்டது. "அடிக்கவேண்டாம் அடிக்கவேண்டாம்" என்று ஜகதீச்வரி அம்மாள் கத்திக்கொண்டே மான் விழுந்த இடத்திற்கு ஓடிவந்தாள். மான்குட்டியின் மூக்கிலிருந்து ரத்தம் கொட்டுகிறது கண்களிலிருந்து நீர் வடிகிறது.



மற்ற மான்கள் ஓர் புதருக்குள் சோகம் மேலிட்ட முகத்துடன் நிற்கின்றன, "எத்தனை காதம் கடந்து பாபத்தைத் தொலைக்க வந்தாலும் உங்கள் பாபம் உங்களை விடாது. என் இப்படி இந்த மானைக்கொலை செய்து இதனுடைய இனத்தைத் தவிக்க விட்டீர்கள்?" என்று ஜகதீச்வரி அம்மாள் சொல்லிக் கொண்டிருக்கையில் அந்தப்பாதை வழியாகச் சென்று கொண்டிருந்த வாலிபன் ஒருவன் கீழே கிடந்த தோல்பெட்டியை எடுத்துக்கொண்டு ஓட ஆரம்பித்தான். அதைகவனித்த அனந்தகிருஷ்ணய்யர் "பிடடா பிடடா" என்று சத்தம் போட்டுக்கொண்டு வாலிபனைத் துரத்தினார். வாலிபன் கன வேகமாய் ஓடி ரயில்வே லயனைத்தாண்டி வடமேற்காலுள்ள அளர் நிலங்களில் விழுந்து மறைந்து விட்டான். பையில் கணிசமான தொகையிருந்தபடியால் எப்படியாவது அதை மீட்கவேண்டுமென்ற ஆத்திரத்தில் தன் சகதர்மிணி காட்டில் தனியாக வருவதையும் மறந்து அத்திருடனைத் துறத்திக்கொண்டே ஓடினார் அனந்தகிருஷ்ணய்யர். சுமார் இரண்டு மைல் தூரம் ஓடினதும் அவருக்கு மார்படைப்பு ஏற்பட்டுப் பிரக்ஞையற்றுக் கீழேவிழுந்துவிட்டார்.

இரவ 7 மணி இருக்கலாம் தென்னல் வீசவீச அனந்தகிருஷ்ணய்யர் களைப்புத் தெளிந்து கண்விழித்துப்பார்த்தபோது தன்சகதர்மிணி பக்கத்தில் நின்றுகொண்டிருந்தாள். அவர்களுக் கெதிரில் இருள்சூழ்ந்த காடு, தோன்றியது. அந்தக்காட்டில் சில மரங்கள் ஒரு மேட்டின்மேல் வளர்ந்திருந்தன. அந்த மேட்டின் பேரில் ஏறி ரயில்வேலயனைக் கண்டு

பிடித்துக்கொண்டு பக்கத்திலுள்ள கிராமத்தில் இரவைக் கழிக்கலாமென்ற எண்ணத்துடன் தம்பதிகள் புறப்பட்டார்கள். அந்த மேட்டின் பேரில் ஒரு மண்டபத்தையும் அதன் மத்தியில் கற்களில் செதுக்கப்பட்டிருந்த இரு பாதங்களையும் கண்டார்கள். ஓஹோ? ஸ்ரீராமருடைய பாதங்கள் இங்கே இருப்பதாகக் கேள்விப்பட்டிருக்கிறோமே! இவைகளாகத்தான் இருக்கவேண்டுமென்று ஸர்வலோக சரண்யனுடைய பாதங்களில் விழுந்து வணங்கி தனக்கு நேரிட்ட கஷ்ட நஷ்டங்களைக்குறித்து வருந்தினார் அனந்தகிருஷ்ணய்யர். சற்று நேரம்கழித்த என் தமயன் மகனுக்கு பூர்வீக சொத்தில் பாகம் கொடுக்க வேண்டியது ரூ. 6000/- அவனுடன் தாரைவார்த்த தொகை ரூ. 1000/ போக பாக்கி ரூ. 5000/- த்தையும் நானே அடைவதற்குச் செய்த சதியின் பயனை அனுபவிக்கிறேன் போலும் என்று தன்னை நிந்தித்துக்கொண்டு மனதை ஒருவாறு சமாதானம் செய்துகொண்டு எழுந்தார் அப்போது வடக்கே ரயிலொன்று போவதைக்கண்டு ரயில்வே லயனைத் தொடர்ந்து அகஸ்தியாம் பள்ளிக்குச்சென்று அவ்விடம் இரவைக் கழித்தார்கள் தம்பதிகள்

மறுநாள் காலையில் தம்பதிகள் வேதாரண்யம் சென்று மணிகர்ணிகையிலும் சமுத்திரத்திலும் ஸ்நானம் செய்து விட்டு ஸ்ரீவேதாரண்யேச்வரரை தெரிசனம் செய்துகொண்டு அவ்வூர் ஜடாமகுட சாஸ்திரிகள் வீட்டிற்கு போஜனத்திற்காகச் சென்றார்கள். போஜனத்திற்குப்பிறகு தாம்பூலம் போட்டுக்கொள்ளும்போது அவ்வூரில் நடக்கும் நன்மைதீமைகளைப்பற்றி ஜடாமகுடசாஸ்திரிகள் சொல்லிக்கொண்டிருந்தார். அனந்தகிருஷ்ணய்யரும் தனக்கு நேர்ந்த கஷ்ட நஷ்டங்களைச்சொல்லி விட்டு சத்காரியங்களைச்செய்ய ஆரம்பித்தால் இப்படி கஷ்டங்கள் ஏற்படுவதற்கு என்ன நியாயம்? என்று ஜடாமகுடசாஸ்திரிகளைக் கேட்டார். "சத்காரியங்களைச் செய்வதனால் முதலில் பாபநிவாரணம் ஏற்படும். பாபநிவாரணத்தின் போது கஷ்ட நஷ்டங்கள் ஏற்படக்கூடும். அவைகளெல்லாம் பாபநிவாரணத்தின் அறிகுறிகள். ஆகையால் அவைகளால் மனச்சோர்வடைந்து சத்கார்யங்கள் செய்வதை நிறுத்திவிடக்கூடாது. பஞ்சமா பாதகங்கள் அழிநடனம் செய்யும் இக்காலத்தில் சத்கார்யங்களும் தெய்வ வழிபாடும் மிகுந்த ஊக்கத்துடன் செய்யப்பட்டாலொழிய லோகத்திற்கு க்ஷேமம் ஏற்படாது. பகவானிடத்தில் பரம பக்தியுடனும், எவ்வுயிரிடத்தும் த்வேஷமில்லாமலும் தன்னலம் கருதாமலும் எவனொருவன் லோக க்ஷேமத்தை நாடித்தொண்டு செய்கிறானோ அவன் கடவுளையடைகிறான் இதுவே அவருக்குப் பரம திருப்தியைஅளிக்கிறது. ஆகையால் அறிவாளிகள் ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு ஸத்ஸங்கத்தை ஏற்படுத்திக்கொண்டு சத்கார்யங்களில் ஈடுபட்டால் லோகத்திற்கு க்ஷேமம் ஏற்படுவதில் என்ன சந்தேகம்? என்று சொல்லிவிட்டு "ஆத்மதத்துவமும் ஸமூகஸேவையும்" என்ற ஒரு புஸ்தகத்தை அனந்தகிருஷ்ணய்யரிடம் கொடுத்தார் ஜடாமகுட சாஸ்திரிகள்.

தம்பதிகள் ஜடாமகுட சாஸ்திரிகளிடம் விடைபெற்றுக்கொண்டு அன்று மாலை ரயிலில் இரண்டாவது வகுப்பு வண்டியில் ஏறி உட்கார்ந்தார்கள். அங்கே தன் பர்த்தாவின் சாயலாக சுமார் 20 வயதுள்ள வாலிபன் ஒருவன் உட்கார்ந்திருப்பதைக் கண்டாள் ஜகதீச்வரி அம்மாள். அந்த வாலிபனுக்கும் தன் பர்த்தாவுக்குமுள்ள ஸாதிருச்யத்தைக் கூர்மையாக கவனித்து விட்டு எனப்பா? உனக்கு எந்தஊர்? என்று கேட்டாள் ஜகதீச்வரி அம்மாள் "எனக்கு குமரகிரி" என்றான் அந்த வாலிபன் "உனக்கு தாயார் தகப்பனார் இருக்கிறார்களா? என்றாள் ஜகதீச்வரி அம்மாள். "எனக்கு தெரிந்து கிடையாது. என்னை ஒரு கிழவனார் வளர்த்துவந்தார். அவரும் காலமாகி 6 வருஷங்களாகின்றன நான் இப்போது தேசாந்திரியாய் ஜீவனம் செய்து வருகிறேன் என்றான் அந்த வாலிபன்.

"தேசாந்திரியாய் ஜீவனம் செய்கிறேன் என்று சொல்லுகிறாய் ஆனால் 2 வது வகுப்பில் பிரயாணம் செல்கிறாயே?" என்று கேட்டாள் ஜகதீச்வரி அம்மாள்.

"எப்போதுமே கடவுள் சோதனை செய்வாரா? ஏதோ பணம் கிடைத்தது இரண்டாவது. கிளாஸ் டிக்கட்டு வாங்கினேன்" என்றான் வாலிபன்.

"ஏண்டா? நீதானே காட்டிலே பையைத் தூக்கிக் கொண்டு ஓடினது?" என்றார் அனந்தகிருஷ்ணய்யர்

"உண்மையைச் சொல்லு" என்றாள் ஜகதீச்வரி அம்மாள்.

அந்த வாலிபனுக்கு என்றும் அனுபவிக்காத ஒரு பாசம் அவர்களிடம் ஏற்பட்டு விட்டது.

"ஆமாம்? வழியில் பை கிடந்தது. நான் தூக்கிக் கொண்டு போனேன். பின்னால் துரத்தினவர் அடிப்பார் என்று பயந்து ஓடிவிட்டேன். பிறகு பையைத்திறந்து பார்த்தேன் ஏராளமானநோட்டுகள் இருந்தன. உங்களுடையதா அந்தப் பை? நான் மூன்று ரூபாய்கள் செலவு செய்திருக்கிறேன். பாக்கி இதோ இருக்கிறது" என்று சொல்லி தன் மடியில் வைத்திருந்த நோட்டுக்கட்டு ஒன்றை அனந்தகிருஷ்ணய்யரிடம் நீட்டினான் அந்த வாலிபன், அனந்தகிருஷ்ணய்யர் அளவிலா ஆச்சர்யத்துடன் வாலிபனைக் கட்டிக்கொண்டு நான் உன்சிறியதகப்பனார், எனக்கு வேறு பிள்ளை கிடையாது. நீயே எனக்குப் பிள்ளை" என்று சொல்லி அவனை தன்னுடன் அழைத்துச் சென்றார். ஜகதீச்வரி அம்மாளுக்கும் ஸ்நான பலன் கைமேல் கிடைத்தது.

சமீபத்தில் ஜடாமகுட சாஸ்திரிகளுக்கு அனந்தகிருஷ்ணய்யரிடமிருந்து அடியில் கண்ட கடிதம் கிடைத்தது.

ராமகிரி.
22-8-50.

பிரும்மஸ்ரீ ஜடாமகுடசாஸ்திரிகளுக்கு அனந்தகிருஷ்ணன் அநேக நமஸ்காரம்,

நானும் என்சம்ஸாரமும் தாங்கள் கொடுத்த புஸ்தகத்தை வாசித்துப்பார்த்தோம். எங்கள் ஊரில் ஓர் சத்ஸங்கம் ஏற்படுத்தப்பட்டு அதன் மூலமாக கோவில்களில் விசேஷமான லக்ஷார்ச்சனை நடந்துவருகின்றன. பிரதி சனிக்கிழமை இரவிலும் ஏகாதசி தினத்தன்றும் பஜனை நடந்து வருகின்றது. அடிக்கடி தர்மப் பிரசாரங்களை நடத்தி வருகிறோம். ஸ்ரீமத் ராமாயணப் பிரவசனமும் நடந்து வருகின்றது. இந்த ஊரி

ஙுள்ள இரண்டு குளங்களையும் சம்பந்தப்பட்ட நபர்களைக் கொண்டு மராமத்து செய்து விட்டோம். நாங்கள் பிரதி ஞாயிற்றுக்கிழமையும் ஏழைமக்கள் வசிக்கும் இடங்களைச் சுற்றிப் பார்த்து அவர்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய வசதிகளை அப்போதைக்கப்போது செய்து வருகிறோம். குடி தண்ணீர்க் கேணிகள் இல்லாத இடங்களில் இரண்டு ஊற்றுகளை வெட்டிக்கொடுத்திருக்கிறோம். அவைகளைக் கட்டுவதற்கும் ஏற்பாடு நடந்து வருகின்றன. சங்கத்தில் குடும்ப மருந்துப்பெட்டி ஒன்றை வாங்கி வைத்திருக்கிறோம். சாதாரண வியாதிகளுக்கு மருந்துப்பெட்டியை உபயோகிக்கும் விதிகளின்படி சம்பந்தப்பட்ட நபர்களே மருந்துகளை உபயோகப்படுத்தி வருகிறார்கள். கூடிய சீக்கிரத்தில் இங்கே வைத்திய சாலை யொன்றை ஏற்படுத்ததிட்டம் செய்து கொண்டிருக்கிறோம். இந்த ஊரில் பள்ளிக்கூடம் ஒன்றை ஏற்படுத்தியிருக்கிறோம். சுமார் 100 பிள்ளைகள் கல்வி பயின்று வருகிறார்கள். தாங்கள் கொடுத்த புஸ்தகத்தில் கண்ட இதர கைங்கர்யங்களையும் கூடிய சீக்கிரத்தில் செய்து முடிக்க ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. தங்கள் ஆசீர்வாதத்தைக் கோருகிறோம்.

அனந்தகிருஷ்ணன்.

9. ஜடாமகுட சாஸ்திரிகள் "பிரும்மார்ப்பணம்" என்று சொல்லிக்கொண்டு பரம சந்தோஷத்தை அடைந்தார்.

---

## வேததர்ம சாஸ்திர பரிபாலன ஸபை.

மேற்படி ஸபையின் ஆதரவில் தஞ்சை தாலூக்கா ஸம்மேளனம் இவ் வருஷம் அக்டோபர் மீ 5,6,7 தேதிகளில் விஷ்ணும்பேட்டை கிராமத்தில் நடக்கப்போகிறது. அதை யொட்டி ஹிதபாஷிணீ ஆசிரியர் R. முத்து கிருஷ்ண சாஸ்திரிகளவர்கள், வேததர்மசாஸ்திர ஸபையின் நோக்கங்களை பற்றியும், வேதங்கள், தர்மசாஸ்திரங்கள் இவற்றின் ஆவச்யகத்தைப்பற்றியும் அடியிற்கண்ட பல கிராமங்களிலும் பல உபன்யாஸங்களைச் செய்து பிரசாரம் செய்தார்கள். மேற்படி கிராமங்களாவன;— நடுக்காவேரி, கருப்பூர், கோனேரி ராஜபுரம். வரகூர். கண்டமங்கலம், கேமம், சய்யாமங்கலம், புதுசத்திரம், கூத்தூர், பூதலூர், கோவிலடி.

மேற்படி கிராமங்களிலுள்ள ஆஸ்திகர்கள் மிக்க ஆவலுடன் உபன்யாஸத்தை சிரவணம் செய்து ஷை ஸபைக்கு ஆதரவை அளித்ததுடன் ஹிதபாஷிணீக்கும் ஆதரவை அளித்திருக்கிறார்கள்.

மேலும் ஆசிரியருடைய உபன்யாஸத்தை ஷை கிராம மஹாஜனங்கள் இன்னும் சிலதினங்களாவது கேட்கவேண்டுமென்று விரும்புகின்ற படியால் சில கிராமங்களில் தொடர்ச்சியாக உபன்யாஸங்கள் கூடிய சீக்கிரம் நடைபெறுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.



## ஸ்ரீ மந்த்ரமாத்ருகா புஷ்பமாலா ஸ்தவம்.

ஸ்ரீ ஆதிசங்கரர் அருளிச்செய்தது.

மொழிபெயர்ப்பு:- K. S. சிதம்பரம் B. O. L.

(முன் இதழ் தொடர்ச்சி)

लक्ष्मीर्मौक्तिकलक्षकल्पितसितच्छत्रं तु धत्ते रसा
दिन्द्राणी च रतिश्च चामरवरे धत्ते स्वयं भारती ।
वीणामेणविलोचनाः सुमनसां नृत्यन्ति तद्रागव
द्भावैराङ्गिकसात्त्विकैः स्फुटरसं मातस्तदाकर्ण्यताम् ॥ 14

லக்ஷ்மீமௌக்திக லக்ஷகல்பிதஸிதச்ச2த்ரம் து த4த்தே ரஸா
தி3ந்த்3ராணீச ரதி: ச சாமரவரே த4த்தே ஸ்வயம் பாரதீ ।
வீணாமேணவிலோசநா: ஸுமநஸாம் ந்ருத்யந்தி தத்3ராக3வ
த்3பா4வைராங்கிக ஸாத்விகை: ஸ்பு2டரஸம் மாதஸ்தத3ாகர்
[ண்யதாம் ॥ (14)

(ப—ரை) मातः தாயே! लक्ष्मीः तु லக்ஷ்மிதேவியோவெனில் मौक्तिकलक्षकल्पितसितच्छत्रम् முத்துக்கள் ஒரு லக்ஷம் கொண்டு அமைக்கப்பட்ட வெண்குடையை रसात् அன்புடன் धत्ते பிடிக்கிறாள். इन्द्राणी रतिः च இந்திராணியும் ரதியும் चामरवरे च உயரிய இருசாமரங்களை (வீசுகிறார்கள்). भारती பாரதியம்மை स्वयम् தானாகவே वीणां வீணையை धत्ते வைத்திருக்கிறாள் (மீட்டுகிறாள்) सुमनसां தேவர்கட்குச்சொந்தமான एणविलोचनाः மான்விழிமாதர்கள் तद्रागवत् அவரவர் விருப்பப்படி (தத்தமது) आङ्गिकसात्त्विकैः அங்கங்களால் சத்வகுண எழுச்சிக்கான भावैः அபிநயங்களோடு स्फुटरसम् ரஸம் விளங்க नृत्यन्ति நர்த்தனம் செய்கிறார்கள். तत् அது (அத்தனையும்) आकर्ण्यताम् கவனிக்கப் படட்டும். (14)

ह्रीकारत्रयसम्पुटेन मनुनोपास्ये त्रयीमौलिभि
र्वाक्यैर्लक्ष्यतनो तव स्तुतिविधौ को वा क्षमेताम्बिके ।
सल्लापाः स्तुतयः प्रदक्षिणशतं सञ्चार एवास्तु ते
संवेशो नमसः सहस्रमखिलं त्वत्प्रीतये कल्पताम् ॥ 15

ஹ்ரீங்காரத்ரய ஸம்புடேந மநுநோபாஸ்யே த்ரயீமௌளிபி4:
வாக்யைர்லக்ஷ்யதநோ தவ ஸ்துதிவிதௌ4 கோ வா க்ஷமே
[தாம்பி3கே? 1
ஸல்லாபா: ஸ்துதய: ப்ரத3க்ஷிணசதம் ஸஞ்சார ஏவாஸ்து தே
ஸம்வேசோ1 நமஸ: ஸஹஸ்ரமகிலம் த்வத்ப்ரீதயே கல்பதாம் II (15)

(ப—ரை) ह्रीङ्कारत्रयसम्पुटेन மூன்று ஹ்ரீம்காரங்களாலும் சம்புடிதமான मनुना மந்திரத்தால் उपास्ये உபாசிக்கலானவளும் त्रयीमौलिभिः மூன்று வேதங்களினாலும் மகுடமெனப்போற்றப்படும் वाक्यैः வாக்கியங்களால் लक्ष्यतनो குறிக்கப்படும் சரீரம்வாய்ந்தவளுமான अम्बिके அம்பிகையே तव உனது स्तुतिविधौ துதியாகும் முறையில் कोवा யார்தான் क्षमेत சமர்த்தராவர் (எனவே) सल्लापाः (எனது) பேச்சுக்கள் எல்லாம் ते உனது स्तुतयः தோத்திரங்களாகவும் सञ्चार एव அலைதலே प्रदक्षिणशतम् நூற்றுக்கணக்கான பிரதக்ஷிணங்களாகவும் संवेशः படுத்திருத்தலே नमसः நமஸ்காரத்தின் सहस्रम् ஓராயிரமாகவும் अस्तु அமையட்டும். अखिलम् (இவை) அத்தனையும் त्वत्प्रीतये உனது ப்ரீதிக்காகவே कल्पताम् கருதப்படட்டும் (அமையட்டும்.) (15)

श्रीमन्त्राक्षरमालया गिरिसुतां यः पूजयेच्चेतसा
सन्ध्यासु प्रतिवासरं सुनियतस्तस्यामलं स्यान्मनः ।
चित्ताम्भोरुहमण्टपे गिरिसुता नृत्तम् विधत्ते रसा
द्वाणी वक्त्रसरोरुहे जलधिजा गेहे जगन्मङ्गला ॥ 16

ஸ்ரீமந்த்ராக்ஷர மாலயா கி3ரிஸுதாம் ய: பூஜயேச்சேதஸா
ஸந்த்3யா ஸு ப்ரதிவாஸரம் ஸுநியதஸ்தஸ்யாமலம் ஸ்யாந் மந: 1
சித்தாம் போ4ருஹ மண்டபே கி3ரிஸுதா ந்ருத்தம் வித4த்தே ரஸாத்
வாணீ வக்த்ரஸரோருஹே ஜலதி4ஜா கே3ஹே ஜக3ந்மங்க3லா II (16)

(ப—ரை) गिरिसुतां பர்வதராஜகுமாரியை प्रतिवासरं தினந்தோறும் सन्ध्यासु சந்தியாகாலங்களில் सुनियतः முறைதவறாது चेतसः மானஸீகமாக (ஒருமித்தமனதுடன்) यः எவன் पूजयेत् பூஜிப்பானோ तस्य அவனது मनः மனம் अमलं மலர்களற்று



றாயதாய் स्यात् ஆகும் (அவனது) चित्ताम्भोरुहमण्डपे மனமாகும் தாமரைமண்டபத்தில் गिरिसुता பார்வதியம்மை रसात् இன்பமாய் नृत्तं विधत्ते நர்த்தனம் செய்கிறாள். (அவ்வாறே) वक्त्रसरोरुहे (அவனது) முகமாகும் தாமரையில் वाणी சரஸ்வதியம்மை (நடனம்புரிகிறாள்) गेहे வீட்டில் जलधिजा அமுதக் கடலினின்றும் தோன்றிய जगन्मङ्गला உலகுக்கு மங்களம் புரியும் லக்ஷ்மியம்மை रसात् नृत्तं विधत्ते இன்பமாய் நடம் புரிகிறாள்.

इति गिरिवरपुत्रीपादराजीवभूषा
भुवनममलयन्ती सूक्तिसौरभ्यसारैः ।
शिवपदमकरन्दस्यन्दिनीयं निबद्धा
मदयतु कविभृङ्गान्मातृकापुष्पमाला ॥

இதி கி3ரிவர புத்ரீபாத3ராஜீவ பூ4ஷா
பு4வநமமலயந்தீ ஸூக்தி ஸௌரப்4ய ஸாரை: 1
சி1வபத3 மகரந்தஸ்யந்தி3நீயம் நிப3த்3தா4
மத3யது கவிப்4ருங்கா3ந் மாத்ருகா புஷ்பமாலா II (17)

(ப—ரை) इति இவ்வாறாக सूक्तिसौरभ्यसारैः நல்ல சொற்களின் வாசனையென்னும் ஸாரத்தினால் निबद्धा அமைக்கப்பட்ட गिरिवरपुत्रीपादराजीवभूषा பார்வதியம்மையின் பாததாமரைக்கு ஆபரணமாய் விளங்குவதும் भुवनं உலகை अमलयन्ती றாயதாக்குவதும் शिवपदमकरन्दस्यन्दिनी சிவபதமாகும் தேனைப் பெருக்குவதுமான इयं இந்த मातृकापुष्पमाला மாத்ருகா புஷ்பமாலையாகும் தோத்திரப்பா कविभृङ्गान् கவிகளாகும் வண்டுகளை मदयतु இன்பமுறச்செய்யட்டும். (17)

முற்றிற்று.

# மாணவர் ஸம்ஸ்கிருதம்.

## ஸர்வநாம சப்தங்கள்.

---

(பிரதமை) अहं – நான்.—आवां—நாங்கள் (இருவர்) वयम् நாங்கள். (பலர்)

இதற்கு 'அஸ்மத்' சப்தம் என்று பெயர். பல ரூபங்களில் இந்த சப்தத்தில் அஸ்மத் என்பது காணப்படவில்லை என்பது ஒரு விசேஷம்.

त्वं -நீ युवां – நீங்கள். (இருவர்) यूयं –நீங்கள் – (பலர்) இதற்கு யுஷ்மத் சப்தம் என்று பெயர் இதிலும் பல ரூபங்களில் யுஷ்மத் என்பது காணப்படவில்லை. இவ்விரண்டு சப்தங்களும் எல்லா லிங்கங்களிலும் ஒரேமாதிரியான ரூபங்களையே பெற்றிருக்கின்றன.

| | | |
|---|---|---|
| अहं मनुष्यः— | நான் மனிதன் | (புல்லிங்கம்) |
| अहं कन्या— | நான் கன்னிகை | (ஸ்திரீலிங்கம்) |
| अहं यक्षः— | நான் ஒரு யக்ஷஸ் | (நபும்ஸகலிங்கம்) |
| त्वं देवः— | நீ தேவன் | (பும்) |
| त्वं राक्षसी— | நீ ராக்ஷஸி | (ஸ்தி) |
| त्वं ब्रह्म— | நீ பிரும்மம் | (நபு) |

இவ்விரண்டு சப்தங்களையும் நன்றாக மனப்பாடம் செய்யுங்கள்.

தற்காலம் ஹைஸ்கூல்களில் படிக்கும் மாணவர்களுள் சிலர் முக்கியமான இம்மாதிரி சப்தங்களைக்கூட சரிவர மனப்பாடம் செய்யாத காரணத்தால் (S. S. L. C) பரீக்ஷையில் சுலபமாக பெறக்கூடிய பலமார்க்குகளை இழந்து விடுகின்றனர். ஆதலால் ஆரம்பகாலத்திலேயே இவற்றை மனப்பாடம் செய்ய வேண்டியது மிக அவசியம்.



### एतच्छब्दः (दकारान्तः)

| | | | |
|---|---|---|---|
| (पु—प्र) | एषः | एतौ | एते |
| (स्त्री—प्र) | एषा | एते | एताः |
| (न—प्र) | एतत् | एते | एतानि |

स्त्री-एषा अस्माकम् पाठशाला இது எங்களுடைய பாடசாலை.

पु-एष माणवकः अत्र पठति இந்த மாணவன் இங்கு படிக்கிறான்.

न-एतानि पुस्तकानि अद्य क्रीतानि இந்த புஸ்தகங்கள் இப்பொழுது வாங்கப்பட்டன.

### तच्छब्दः (दकारान्तः)

| | | | |
|---|---|---|---|
| (पु—प्र) | सः | तौ | ते |
| (स्त्री—प्र) | सा | ते | ताः |
| (न—प्र) | तत् | ते | तानि |

| | |
|---|---|
| सः पिता | அவர் தகப்பனார் |
| सा माता | அவள் தாயார் |
| तत् उद्यानम् | அது பூந்தோட்டம் |

### इदम् शब्दः (मकारान्तः)

| | | | |
|---|---|---|---|
| (पु—प्र) | अयम् | इमौ | इमे |
| (स्त्री—प्र) | इयम् | इमे | इमाः |
| (न—प्र) | इदम् | इमे | इमानि |

अयम् आलयः पश्चिमाभिमुखः अस्ति।
இந்தக்கோவில் மேற்குமுகமாக இருக்கிறது.

इयम् माला प्रत्यहं स्वामिने ग्रथ्यते।
இம்மாலை பிரதிதினம் ஸ்வாமிக்காக தொடுக்கப்படுகிறது

इदं पयः अभिषेकार्थमानीयते।
இந்தப்பால் அபிஷேகத்திற்காக கொண்டுவரப்படுகிறது.

### अदः शब्दः (सकारान्तः)

| | | | |
|---|---|---|---|
| (पु—प्र) | असौ | अमू | अमी |
| (स्त्री—प्र) | असौ | अमू | अमूः |
| (न—प्र) | अदः | अमू | अमूनि |

(தொடரும்)

(451-ம் பக்கத்தொடர்ச்சி.)

வேண்டாம் எனக்கூறியிருக்கலாம். வேண்டுமானால் உடனேயே பணத்தைக் கொடுத்திருக்கலாம்.

**தா:**— ரொம்ப பேசாதேடா! கொடுக்கவேண்டாம் என்று யாருக்குடா எண்ணம். கொடுப்போம்; இப்போ என்ன அவசரம்.

**பே:**— தாத்தா! என்ன பேச்சு பேசுகிறீர்கள். நேற்று நெல் வியாபாரி ஒருவர் 1496 ரூபாய்களைக் கொடுத்துவிட்டு, பாக்கி ரூபாய் நான்கை நாளை கொண்டு தருகிறேன், என்று சொன்னார் உடனே அவர்மேல் "செள்" என்று விழுந்து பாக்கி ரூபாய் நான்கையும் கறந்துவிட்டீர்களே! ஞாபகமில்லையோ! தன்னைப்போலவே பிறரையும் பாவிக்க வேண்டும்.

நீங்கள் செய்யும் அநீதிகளுக்கு இவ்வுலகில் உங்களை தண்டிக்கக்கூடியவர் ஒருவர் இல்லாமல் இருக்கலாம். இருந்தாலும் நீங்கள் செய்யும் அநீதிகளுக்கு எல்லாம் பத்து சாக்ஷிகள் உங்கள் அருகிலேயே இருக்கின்றனர். அவர்கள் யமலோகத்தில் உள்ள கோர்ட்டில் உங்களுக்கு விரோதமாக் சாக்ஷியம் கொடுத்து கட்டாயம் உங்களை தண்டிக்கும்படி செய்வார்கள். ஆகலால் நீங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும், இது சரியா! அல்லது சரியல்லவா! என்று முன்னமேயே ஆலோசித்து தைவத்திற்கு பயந்து காரியத்தைச்செய்யுங்கள்.

**தா:**— சரி, சரி, ரொம்ப ரொம்ப வேதாந்தம் பேசாதே. நாளையதினம் அந்த ஏஜெண்டு வந்தால் அடுத்தவாரம் வாச்சொல்.

**பே:**— அப்பொழுதுதான் நாள் நன்றாக இருக்கிறதோ?

**தா:**— அப்பொழுதுதான் சவுக்குக்கட்டை வியாபாரி பணத்துடன் வருவான்.

**பே:**— அவன் 100 ரூபாய் நோட்டாய் கொண்டுவந்தால்?

**தா:**— அதற்கென்ன செய்யலாம். இவருக்குக்கொடுக்க வேண்டிய ரூ. 6-க்காக, 100 ரூபாய் நோட்டை மாற்றமுடியுமா? பின்புதான் அவர் வந்து வாங்கிக்கொள்ளவேண்டும்.

**பே:**— நீங்கள் கொடுக்கவே வேண்டாம், நானே கொடுத்துவிடுகிறேன்.

**தா:**— உன்னோடு வீண் பேச்சுப்பேசி ஸந்தியா காலம் கடந்துவிட்டது. 'என்ன பாபமிது' என்று சொல்லிக் கொண்டே காவேரிக்குச்சென்றுவிட்டார் தர்மபுத்திர தீக்ஷிதர்.

---



## ஐவர்களும் தகப்பனுக்குச் சமம்.

தன்னை உற்பத்தி செய்தவன், உபநயனம் செய்து வைத்தவன், கல்வி கற்பித்தவன், அன்னமளித்தவன், பயத்திலிருந்து காப்பாற்றியவன் இந்தஐவரும் தகப்பனுக்குச்சமமானவர்கள்.

## மனித பரீக்ஷை.

பவுன் சுத்தமாக இருக்கின்றதா என்பதை அறிய உரைத்தும், வெட்டியும், காய்ச்சியும் பார்ப்பார்கள். அதுபோல் தியாகம் ஒழுக்கம், நற்குணங்கள், தர்மானுஷ்டானம், இவற்றைக்கொண்டு மனிதனை நல்லமனிதன் எனத்தீர்மானம் செய்யலாம். ஒருவனிடம் இந்நான்கும் பூர்ணமாக இல்லாதவரை அவன் சிறந்த மனிதனாகக்கருதப்பட மாட்டான்.

## ஸம்ஸாரதாபத்தின் சிரமந்திர.

இப்பிரபஞ்ச வாழ்க்கையில் உண்டான பலவித துன்பங்களால் களைப்புற்றவனுக்கு அடியிற்கண்ட மூன்றுதான் சொல்ப ஆறுதலை அளிக்கக்கூடும்.

1 ஒழுங்கான பிள்ளை. 2 சிறந்த மனைவி. 3 ஸாதுக்களின் சேர்க்கை.

## தர்மம் தலைகாக்கும்.

ஸ்ரீ ராமன் காட்டுக்குப்போவதற்குமுன் கௌசல்யாதேவியிடம் விடைபெற்றுக்கொள்ளப் போனார். ஊருக்குப்போகும் குழந்தைக்குத் தாயார் பக்ஷணம் கட்டிக்கொடுக்குப்பது வழக்கம் அல்லவா? பதினான்கு வருஷம் போயிருக்க வேண்டிய குழந்தைக்கு என்ன கொடுப்பது? அவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை. நிறப்ப ஆலோசித்து சொல்லுகிறாள்.

यं पालयसि धर्मं त्वं धृत्या च नियमेन च ।
स वै राघवशार्दूल धर्मस्त्वामभिरक्षतु ॥

(அயோத்யா காண்டம் 25-3)

"ஏ ராகவா! நான் உன்னை ரக்ஷிக்க ஒன்றும் செய்வதற்கில்லை. தர்மம் ஒன்றுதான் இருக்கிறது. தைரியமாகவும், ஒரே நீதியாகவும் நியாயமாகவும் எந்த தர்மத்தை நீ பாதுகாத்து வருகிறாயோ அந்த தர்மம் தலைகாக்கும். [illegible] நான் செய்யும் அநுக்ரஹம் என்றாள்.

19985l
Rm211;3,N47

தஞ்சை சரஸ்வதிமகால் ஏட்டுச்சுவடியிலிருந்து
தேர்ந்தெடுத்து தயாரிக்கப்பட்ட கீழ்கண்ட

## அபூர்வ ஔஷதங்கள்.

சகாயவிலையில் கிடைக்கும்.

சுத்தமான தயாரிப்பு! பூரணமான குணம்!!

1 வஜ்ஜிரவல்லீதகி லேகியம். எவ்வித வயிற்று வலிகளையும் நீக்க வல்லது) 1 lb. ரூ 4—8—0
2 குமரித்தைலம்-கண்ரோகம், தலைபொடுகு, வெட்டைச்சூடு, PSORIASIS என்ற சருமரோகம் முதலியவைகளை நீக்க வல்லது 4 அவு. ரூ 1—8—0
3 சரபேந்திர சூரணம் (7 நாள் மருந்து பாக்கெட்) ரூ 0—6—0
4 கரப்பான் தைலம்-எவ்வித குழந்தைகள் கரப்பானுக்கும் உத்தாவாதம். 4 அவு ரூ 1—8—0

தபால் சிலவும், பாக்கிங்கும் பிரத்யேகம். விபரங்களுக்கு தபால் பில்லையுடன் எழுதுக.

**Dr. S. வெங்கட்டராஜன், L. I. M.**
ஸ்ரீவெங்கட்டரமண-ஆங்கில ஆயுர்வேத வைத்தியசாலை
ஸஹாநாயக்கன் தெரு, தஞ்சாவூர்.

## "அம்ருத சஞ்சீவி"

குழந்தைகளுக்கு ஈரல், சூலை,
கட்டிகளுக்கு தாயைப்போன்ற
ஓர் வரப்பிரசாதனி.

தயாரிப்பவர்:
என். எஸ். வெங்கிட்டராமய்யர்,
நாடி, குழந்தை வைத்திய நிபுணர், கரூர்.

ப்ரதான வைத்திய ஆலோசகர்
வைத்ய விசாரத

## V. R. லெக்ஷ்மீகாந்த சர்மா

ஆயுர்வேத சிரோமணி

சென்னை ஸர்வகலாசாலைப் பட்டம் பெற்ற நிபுணர்களின் நேர் பார்வையில் மருந்துகளும் சிகித்சைகளும் செய்யப்படுகின்றன.

பார்சவ வாயு, இளம்பிள்ளை வாதம், நீடித்த நீருத தலைவலி முதலிய கடுமையான வியாதிகளுக்கு அபூர்வ நிவாரணியான நவரை கிழி, பிழிச்சல், தாரை முதலிய உயர்ந்த சிகித்சைகள் அளிக்கிறோம்.

வியாதியஸ்தர் தங்கி வைத்தியம் செய்து
கொள்ள பூர்ண வசதிகளுடன் கூடிய

மிகவும் பிரசித்திபெற்ற ஸ்தாபனம்.

எல்லாவித ஆயுர்வேத மருந்துகளும் தயாரிலிருக்கின்றன

விபரங்களுக்கு

தந்தி: லலிதாலய. ஸ்தாபிதம்: 1942.

## லலிதா பார்மஸி,

ஆயுர்வேத வைத்யசாலை,
**கும்பகோணம்.**

உங்கள் தேவைக்கு

நம்பிக்கையும், நாணயமும் உள்ள
எங்கள் கடை
1812-ல் ஸ்தாபிக்கப்பட்டது.

தகுதியான இடம் :—

**B. S. ஜோஷி & பிரதர்ஸ்,**
மேலராஜவீதி, தஞ்சாவூர்.

உயர்ந்த ரக பட்டு, நூல் ஜவுளி ஏராளமாக ஸ்டாக்
செய்திருக்கிறோம்

Wrapper Printed by Sri Rajarajeswari Press, South Main St Tanjore. Inside Pages Printed by V. S. Rajagopalan at the Mannargudi Press Ltd., Mannargudi. Editor & Publisher R. Muthukrishna Sastrigal 1835/3 West Main Street, Tanjore.